# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 40
விலை 20/=

தீபம்-40
ஜூன் இதழ்-2017 ,ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


**என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு. (தி.பா 146 : 1).**



## ஆயரின் செய்தி

இயேசுவில் அன்புள்ள வாசகர்களுக்கு,

திரித்துவத்தின் பெயரால் உங்களை வாழ்த்துகின்றேன்

எமது கிறிஸ்தவ பயணத்தில் நாம் பல நிலைகளையும் கடந்து செல்கின்றோம். எமது ஆன்மீகத்திற்கு மேலும் உரமூட்டுவதாக இந்நாட்களில் சில வழிபாடுகள் நடைபெற்றன.

**மரியன்னைபக்தி:**

மரியன்னையின் வணக்கமாதம். நாம் செபமாலைப் பக்தியில் வளர இது சந்தர்ப்பமாகியது. இதில் மரியாயின் சேனை அங்கத்தவர்களின் பங்களிப்பு பராட்டத்தக்கது. அதே போல செபமாலைப் பவனி மேலும் எமது விசுவாசத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. நகர்ப்புறப் பங்குகள் இணைந்து நடாத்திய செபமாலைப் பவனி கடந்த வருடம் சிறப்பாகத் தொடங்கப்பட்டது. இவ்வருடமும் பங்குத் தந்தையர்களும் ஏனைய குருக்களும் சிறப்பாக திட்டமிட்டு ஒழுங்கு செய்திருந்தார்கள். இதன் உச்சமாக பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தல பெருவிழா அமைந்திருந்தது. பெருவிழா சிறப்பாக அமைய தம்மை அர்ப்பணித்த அருட்பணி செ.மதுராங்கன் அடிகளுக்கும் உதவிப் பங்குத்தந்தை, பங்கு மக்களுக்கும் எமது வாழ்த்துக்கள். மரியா மூலமாக மரியாவைப் போல இயேசுவை அனுபவிக்க எமது பயணம் தொடரட்டும்.

**பெந்தக்கோஸ்து:**

பெந்தக்கோஸ்து பெருவிழாவும் அதற்கான ஆயத்த செப வழிபாடுகளும் மேலும் எமது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவியது எனலாம். இவ்வருடம் நாம் இந்தியாவிலிருந்து சகோதரர் கிறிஸ்துதாஸ் என்பவரை அழைத்திருந்தோம். அவரும் அழைக்கப்பட்ட பங்குகளுக்கெல்லாம் சென்று தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அனைத்து ஒழுங்குகளையும் செய்த அருட்பணி போல் ரொபின்சன் அடிகளாருக்கும் அவரோடு உழைத்த ஒவ்வொருவருக்கும் எமது பாராட்டுக்கள்.

தொடர்ச்சி 2ம் பக்கத்தில்.......

## துறவற வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் அருட்திரு அல்பன் அடிகளார்



அருட்தந்தை அல்பன் ராஜசிங்கம் (அமதி) அடிகளார் இவ்வாண்டு மே மாதம் 31ம் திகதி தனது துறவற வாழ்வில் 50 ஆண்டுகளை (1967. மே. 31 - 2017. மே. 31) நிறைவு செய்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றார். 1967ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி அடிகளார் அமலமரித்தியாகிகள் சபையில் தனது முதல் துறவற வார்த்தைப்பாட்டை எடுத்தார். அல்பன் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 35 ஆண்டுகள் பல்வேறு...

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்.......

## பிறர் பணியில் இறை மடியில்
## அருட்தந்தை J.S. அரசரெத்தினம் சுவாமிகள் அருட்தந்தை



அமரர் அருட்தந்தை ஜெரேமியா சைமன் அரசரெட்ணம் இரும்பு மனிதன் போல் தோற்றமளிப்பார். ஆனால் இளகிய இதயம் கொண்டவர். கல்மனம் படைத்தவர் போல் காட்சியளிப்பார். ஆனால் கண்களில் கண்ணீர் மல்க அவரது கனிவுள்ளம் அவரது சுயத்தை வெளிப்படுத்தும் அபயக்குரல் கேட்டால் உதவிக்கரம் நீட்டும் உத்தம மகான் பண்டத்தரிப்பை இருப்பிடமாகக் கொண்ட சைமன் தம்பிராஜாவுக்கும் அன்னம்மாவுக்கும் 1924ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ம் திகதி பிறந்தார்.....

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்......

## மதத்தலைவர்களின் நல்லிணக்க கருத்துக்கள்



"மக்களுள் நல் உறவு", "இனங்களுக்குள் ஒற்றுமை", "மதங்களுக்குள் நல்லிணக்கமும் சமாதானமும் ஏற்பட வேண்டும் சகலமக்களும் சந்தோஷமாக வாழ வேண்டும்" எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் ஸிசெட் கிறித்தாஸ் நிறுவனத்தினரால் மதத்தலைவர்களைக் கொண்டு ஆரம்பமானது.

இதற்கு வணக்கத்திற்குரிய ஆயர் அதிவந்தனைக்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில்

தொடர்ச்சி ...ம் பக்கத்தில்.......

## தேசிய கல்வி நிறுவகத்திற்கு (N.I.E) உதவி விரிவுரையாளர்



அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த எஸ். அன்ரனி பொன்சியன் அவர்கள் 2017 மே மாதம் 29ம் திகதியிலிருந்து கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு கத்தோலிக்க சமயமும் விழுமியக்கல்விக் குமான உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 04ம் பக்கத்தில்.......

## குருத்துவ திருநிலைப்படுத்தல்
## 03.06.2017



03.06.2017 அன்று மன்னார், தூய செபஸ்தியார் பேராலயத்தில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர், அருட்கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் குருவாக திருநிலைப் பட்ட அருட்தந்தை ஜேம்ஸ் ஜெரிக் குமின்ரஸ் 1987ம் ஆண்டு சித்திரை மாதம் 28ம் திகதி திரு ஆசீர்வாதம் ஜேம்ஸ், திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி இவர்களுக்கு 8வது பிள்ளையாக மன்னார் மறைமாவட்டம் விடத்தல் தீவு என்னும் இடத்தில் பிறந்தார். இவருக்கு 04 மூத்த சகோதரர்களும் 3 மூத்த சகோதரிகளும் ஒரு இளைய சகோதரரும் உள்ளனர்.

தொடர்ச்சி 8ம் பக்கத்தில்.........

## இந்தியா பெங்களூர் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தில் பொதுநிலையினருக்கான இறையியல் புதிய கண்ணோட்டம் தொடர்பான ஆழ அகல தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு



இந்தியா பெங்களூர் தேசிய மறைக் கல்வி நடுநிலையத்தில் 27.05.2017 ஆம் திகதி தொடக்கம் 02.06.2017 வரை நடைபெற்ற மேற்படி பயிற்சிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையின் முயற்சியினாலும் அர்ப்பணிப்பினாலும்

தொடர்ச்சி 10ம் பக்கத்தில்.......

## இயேசுவோடு 12 மணி நேரம்
## விசேட நற்கருணை ஆராதனை

இடம் : குழந்தை இயேசு ஆலயம்
உவர்மலை.

காலம் : 08 யூலை 2017 (சனிக்கிழமை)
(வெள்ளி, சனி கிழமைகளில்)

நேரம் : பிற்பகல் 12 மணிமுதல்
இரவு 12 மணி வரை



**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர் (தி.பா 112 : 1)**

## உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

புதிய மாதம் இம்மாதத்திலும் உங்களோடு பேசுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு அது எனக்கு பெருமகிழ்வே. புதிய மாதம் தொடங்கி நகர்கின்றது. முடிவடைந்த மாதத்திலே எத்தனையோ இயற்கை அனர்த்தங்கள். குறிப்பாக மலைநாட்டிலே மண்சரிவுகள், கனமழை, வெள்ளப் பெருக்கு என பல நிகழ்ந்து பல உயிர்களை காவு கொண்டதோடு, பலர் காணாமலும் போயுள்ளனர். உயிர்களை இழந்து உடமைகளை இழந்து இருப்பிடங்களை இழந்து முகாம்களுக்குள் முடங்கிவிட்ட வாழ்வுகளை நினைக்கும் போது வேதனையே.

அதேவேளை துன்புறும் மக்களின் துயர்களைக்கண்டும் காணாமல் நின்றுவிடாமல் பலமக்களும், நிறுவனங்களும், ஊடகங்களும், அமைப்புக்களும் ஒருமனப்பட்டவர்களாய் உதவ முன்வந்து உதவிக்கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதே. இதேபோன்று பல அரசியல் தலைவர்களும் தமது மாதாந்த பணத்தை நிவாரண நிதியாகக் கொடுத்திருப்பதும் பெருமைப்பட வேண்டியதே. அதேவேளை பல வெளிநாடுகளும் தமது முழுமையான பங்களிப்புக்களை வழங்கியுள்ளது பெருமகிழ்வே. இந்த இழப்புக்களால் வருந்தி வருகின்ற மக்களுக்கு நம்மால் முடிந்தவரை ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்வதோடு அவர்களின் மன அமைதிக்காகவும் இறைவனை வேண்டுவோம்.

ஆன்மீக நிலைகளை நோக்கும் போது இம்மாதத்திலே தூய ஆவியானவரின் பெருவிழா, தூய திருத்துவ விழா, கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா, திரு இருதய ஆண்டவர் பெருவிழா என்பன இம்மாதத்தின் சிறப்பு வழிபாடுகளாக இடம்பெறுகின்றன. நமது ஆன்மீக வாழ்விலே நாம் உறுதி பெற இறை ஆசிரையும், இறை அருளையும் வேண்டி நிற்போம்.

இம்மாதத்திலே தூய அந்தோனியாரின் நாமங்கொண்ட பல பங்கு மக்கள் தமது ஆலயத்திருவிழாவினைக் கொண்டாடுகிறார்கள். பங்குத்தந்தையருக்கும், பங்கு மக்களுக்கும் எமது ஆசிரும் நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக.
இம்மாதத்திலே உலகளாவிய ரீதியிலே "சுற்றுச்சூழல்" தினம் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொருவரும் தமது சூழலை சரிவரப் பராமரிக்கும் பட்சத்தில் பல உயரிய நிலைகளை உலகமே கண்டடையுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

நாட்டில் சமகால அரசியலை நோக்கும் போது பல மாற்றங்கள், அமைச்சரவையில் மாற்றங்கள், நிர்வாக மட்டங்களில் மாற்றங்கள், என்ன மாற்றங்கள் எப்படி நிகழ்ந்தாலும் மதங்கள் ரீதியான சில கசப்பான வேதனையூட்டும் சம்பவங்களும் நிகழ்ந்த வண்ணமுள்ளன. ஆட்சியாளர்கள் இதை இனங்கண்டு அனைத்து மக்களும் இன மத பேதங்களின்றி ஒன்றுபட்டு வாழ வழி சமைக்க வேண்டும். எந்த மதமும் பிழையான பாதைகளைக் காட்டுவதில்லை. கடைப்பிடிப்போர் பாதைகள் மாறிச் செயற்படும் போதே வன்முறைகள் தோன்றுகின்றன. மனங்கள் மாற வேண்டும் பேதங்கள் மறைய வேண்டும். இதனால் நன்மைகள் விளைய வேண்டி நிற்போம்.
இம்மாதத்திலே தமது குருத்துவ நாளை நினைவுகூறும் அருட்பணி லக்ஸ்மன் பீரிஸ் (யே.ச)அருட்பணி C.P.ராஜேந்திரம் (யே.சே) இவர்களுக்கு எமது நல்வாழத்துக்கள்
மேலும் இம்மாதத்திலே பணியாற்றி இறைபதமடைந்த அருட்பணி யோசப் கொஸ்தா, அருட்பணி கொட்பிறி யோசப், (யே.ச) அருட்பணி சந்திரா பெர்ணாண்டோ இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுவோம்.

"அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார் என்பதை மனங்களில் பதித்து செயற்பட வேண்டி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக்கூறி நிற்கின்றேன்.

## தூய வின்சன் டீ பவுல் பிரட்ரிக் ஓசான விழாவும், மறைமாவட்ட புதிய நிர்வாகத் தெரிவும் 2017 - 2020

கடந்த 10.05.2017 அன்று காலை 9.00 மணியளவில் தூய மரியாள் பேராலயத்தில் தூய வின்சன் டீ பவுல் சபை பிரட்ரிக் ஓசான விழாவையொட்டி விசேட நன்றித் திருப்பலி மறைமாவட்ட வின்சன் டீ பவுல் சபை இயக்குனர் அருட்தந்தை யூஜின் போல் ஜொனத்தன் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பேராலய கேட்போர் கூடத்தில் இயக்குனரின் தலைமையில் புதிய நிர்வாகத் தெரிவு 40 நிர்வாக உத்தியோகத்தர்களுக்கிடையில் நடைபெற்றது. இத்தெரிவின் போது புதிய நிர்வாக உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | : திரு.அன்ரனி செபஸ்தியன் டேவிட் (தூய மரியாள் பேராலயம்) |
| உப தலைவர் | : திரு.ஜோர்ஜ் அமலதாஸ் (தூய அந்தோனியார் ஆலயம், சீனக்குடா) |
| செயலாளர் | : திருமதி.சறோஜினி சிறில்பத்திநாதன் (குழந்தை இயேசு ஆலயம் ~ உவர்மலை) |
| உபசெயலாளர் | : திரு.எஸ்.ஞானப்பிரகாசம் (தூய சதாசகாய அன்னை ஆலயம் ~ அன்புவழிபுரம்) |
| பொருளாளர் | : திரு.ஞானம் அல்போட் (தூய லூர்து மாதா திருத்தலம் ~ பாலையூற்று) |

தகவல் : செயலாளர்,
தூய வின்சன் டீ பவுல் சபை

1ம் பக்கத் தொடர்ச்சி........ ஆயரின் செய்தி

தூயஅந்தோனியார்:
ஜூன் மாதமென்றாலே தூய அந்தோனியார் மாதம் என்று கூறுமளவிற்கு தூய அந்தோனியார் ஆலயங்களும், திருவிழாக்களும் அமைந்துள்ளன. புனிதர்கள் எப்போதும் கடவுளோடு பேசுவார்கள் அல்லது கடவுளைப்பற்றி பேசுவார்கள். தூய அந்தோனியார் பிரான்சிஸ்கன் சபை குருக்களின் அர்ப்பணத்தைப் பார்த்து அச்சபையில் இணைந்து இறைவார்த்தையை போதிக்க மொறொக்கோ தேசம் சென்றவர். இறைவனின் திட்டம் வேறாக அமைய அவர் இத்தாலிக்கு வந்து கடைசியா க பாதுவா எனும் நகில் பணி செய்தார்.

இறைவனோடு நெருங்கிய வாழ்வு ~ இறைவார்த்தையைப் போதிக்க அவருக்கிருந்த வேகம், இரண்டுமே இவரது பலம் எனலாம். இவர் இறந்து 30 வருடங்களுக்குப் பின் கல்லறையைத் தோண்டிப் பார்த்த போது உடம்பு அழிந்தாலும் அவரது நாக்கு அழியாமல் உயிருள்ள ஒரு மனிதின் நாக்குபோல இருந்தது. அதை எடுத்து இன்றும் பதுவையில் வைத்துள்ளார்கள். தூய அந்தோனியாரைப் போல நாமும் ஆன்மீகத்தில் வளரவும் மறைபணியாற்றவும் முன்வருவோம்.

திரு இருதயபக்தி
இம்மாதம் 23ம் திகதி இருதய ஆண்டவர் பெருவிழாவாகும். திரு இருதயத்திலிருந்து வழிந்தோடும் அன்பையும் இரக்கத்தையும் அனுபவித்தவர்கள் பலர். 27ம் திகதி மறைமாவட்டத்தில் பணிசெய்யும் குருக்கள் விசேட நற்கருணை வழிபாட்டின் போது இருதய ஆண்டவருக்குத் தம்மைப் புனிதப்படுத்திக்கொள்வார்கள். குருக்களின் வாழ்வு வளம் பெறவும், பணி சிறக்கவும் செபிப்போம். அனைவரும் திரு இருதய ஆண்டவரில் ஆழமான பக்தியை வளர்த்து அவரைப் போல வாழ்ந்து காட்டுவோம். தொடர்ந்து நாம் பங்கு மட்டத்திலும், மறைமாவட்ட மட்டத்திலும் ஒழுங்கு செய்யப்படும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு எமது ஆன்மீக வாழ்வை வளர்த்துக்கொள்வோம்.

இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்துப் பாதுகாப்பாராக.

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்,
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

## மாதம் ஒரு புதுமை
## தூய அந்தோனியார்



தூய அந்தோனியார் சிறந்த பேச்சாளராக இருந்தாலும் மக்கள் அவரது போதனையைக் கேட்பது குறைவாகவே இருந்தது. ரிமினி எனும் இடத்தில் மதசார்பற்றவர்கள் தூய அந்தோனியாரின் போதனையைக் கேட்க மறுத்தனர். ஆனாலும் போதிக்க வேண்டும் எனும் வைராக்கியத்தோடு தூய அந்தோனியார் கடற்கரைக்குச் சென்று போதிக்கத் தொடங்கினார்.
நீர் அருகே நின்று போதித்தபோது கடலின் மட்டம் பிரிய ஆயிரக்கணக்கான மீன்கள் தோன்றி அவரது போதனைக்குச் செவிமடுத்தன. எவ்வித அசைவும் இல்லாமல் அவை நிற்க தூய அந்தோனியார் அவற்றிற்குப் போதித்தார். பின் சிலுவையடையாளத்தால் அவற்றிற்கு ஆசி வழங்கினார்.

## பெரிய வெள்ளி பங்குகளின் சேகரிப்பு - 2017

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 01. | தூய லூர்து அன்னை ஆலயம், பாலையூற்று | 57,613.00 |
| 02. | தூய மரியாள் பேராலயம் | 43,350.00 |
| 03 . | இறை இரக்க திருத்தலம், அலஸ்தோட்டம் | 27,660.00 |
| 04. | குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை | 25,080.00 |
| 05. | தூய சூசையப்பர் ஆலயம். நிலாவெளி | 17,490.00 |
| 06. | தூய அந்தோனியார் ஆலயம், மூதூர் | 17,166.00 |
| 07. | தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவு | 16,400.00 |
| 08. | தூய குவாடலூபே அன்னை ஆலயம், சின்னக்கடை | 15,140.00 |
| 09. | திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரம் | 10,400.00 |
| 10. | தூய வனத்து அந்தோனியார் ஆலயம், செல்வநாயகபுரம் | 8,100.00 |
| 11. | தூய அந்தோனியார் ஆலயம், சீனக்குடா | 7,500.00 |
| 12. | தூய சதாசகாயமாதா ஆலயம், கந்தளாய் | 5,600.00 |
| 13. | தூய பற்றிமா மாதா ஆலயம், தம்பலகாமம் | 3,500.00 |
| 14. | கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா | 3,000.00 |
| 15. | தூய செபமாலை மாதா ஆலயம், குச்சவெளி | 2,000.00 |
| | முழுத்தொகை | 259,999.00 |

தகவல் : அருட்தந்தை. அன்ரூ ஸ்ரீபன்,
நிதிப்பொறுப்பாளர், ஆயர் இல்லம்,
உவர்மலை, திருகோணமலை

## வத்திக்கான் செய்திகள்

❄எவ்வளவுக்கு அதிகமாக குழந்தைகள் ஸ்மார்ட் போன், டேப்லெட் போன்ற கருவிகளை பயன்படுத்துகிறார்களோ , அதறகேற்றாற் போல அவர்கள் பேசும் திறன் தாமதமாகக் கூடும் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

❄உண்மையைக் கடந்து போலிச் செய்திகளை உருவாக்கும் போக்கு அதிகரித்து வரும் இன்றைய சூழலில், செய்தியாளர்கள் தங்கள் பணியை, நம்பகத் தன்மையுடன் ஆற்றுவது மிக முக்கியமாக மாறி வருகிறது என்று ஐ.நா அவை வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

❄இப்புவியில் வாழும் மக்களில் மூன்று பேருக்கு ஒருவர் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் துன்புறுகின்றனர் என்றும், இதன் காரணமாக பொதுநலத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் ஆண்டுக்கு 3.5 டிரில்லியன் டொலர் இழப்பு ஏற்படுகிறது என்றும் ஓர் அறிக்கை தெரிவிக்கின்றது.

❄வாழ்க்கைப் பாதையில் முன்னோக்கிய பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டியது மனிதன், மேலும், சமுதாயத்தின் விளிம்புகளைத் தேடிச்செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையாத கண்ணீர்

அருட்பணி N.C. அருள்வரதன்

மழையின் ஆரவாரம் ஓயவில்லை, சரமாரியான மழை பொழிந்து கொண்டிருந்தது. தகரக் கொட்டிலிலே விழும் மழை நீர் காதுகளைத் துளைத்துக் கொண்டிருந்தது. பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பி விட்டு வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார் அமலா.

அமலாவுக்கு சங்கீதா என்ற ஒரே ஒரு மகள் மட்டுந்தான். சங்கீதா எட்டாமாண்டு படிப்பவள். சங்கீதாவுக்கு இரண்டு வயது இருக்கும் போது அமலாவுக்கும் அவளது கணவனுக்குமிடையே ஏற்பட்ட முறுகல் பெரிதாகி குடும்பமே உடைந்து விட்டது. அமலாவின் கணவர் தாயையும் பிள்ளையையும் தனியாக விட்டு விட்டு இப்போது வேறு ஒரு குடும்பம் நடத்துகிறார்.
அமலாவைப் பொறுத்தவரை எந்தவித உதவிகளும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஒருவீட்டிலே சமையல் வேலைக்குப் போகின்றவர். அவர்கள் கொடுக்கும் கொடுப்பனவுடனேயே அவர்களின் வாழ்வு நகர்ந்து கொண்டிருந்தது.

சங்கீதாவுக்குத் தாயின் மீது நிறைந்த அன்பு. அப்பா அம்மாவை விட்டுப் போனது அவளுக்குத் தெரிந்திருந்தது. தான் நன்றாகப் படித்து அம்மாவுக்கு உதவ வேண்டுமென்பதே அவளின் இலட்சியமாக இருந்தது. சங்கீதா நன்றாகப் படித்தாள். ஆசிரியர்களுக்கும் அவள் மீது மிகுந்த அக்கறை நிறைந்திருந்தது. அந்த அளவிற்கு சங்கீதா கல்வியிலே தனது திறமைகளைக் காட்டிக் கொண்டிருந்தாள். வகுப்பிலே முதல் மாணவியாக வருவாள்.

மழைவிட்டபாடாகத் தெரியவில்லை. பாடசாலை முடியும் நேரமும் கடந்து கொண்டிருந்தது. பிள்ளையை எப்படிப்போய் கூட்டிவருவதென்று தெரியாமல் சங்கீதாவின் தாய் மனதாரக் கலவரப்பட்டுக் கொண்டிருந்தவள் கடைசியில் எப்படியோ தானே சென்று பிள்ளையைக் கூட்டி வருவதென்ற முடிவோடு மழையையும் பொருட்படுத்தாமல் பாடசாலைக்குள் வந்துவிட்டார்.

மழையின் கனத்தால் பல பிள்ளைகள் போக முடியாமல் பாடசாலையிலேயே நின்றுகொண்டிருந்தார்கள். சில பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்கள் வந்து கூட்டிச்சென்று கொண்டிருந்தார்கள். சங்கீதாவின் தாயைக்கண்ட ஒருபிள்ளை சொன்னது "சங்கீதா போய் விட்டாரென்று" இதைக்கேட்டதும் சங்கீதாவின் தாய் வீட்டிற்குத் திரும்பி விட்டார். வீட்டிற்கு வந்து பார்த்தபோது பிள்ளையை அங்கு காணவில்லை. சிலவேளை அவளின் நண்பிகளின் வீட்டிலே நிற்பாளென்ற எண்ணத்துடன் அவளது நெருங்கிய நண்பியின் வீட்டிற்குப் போனார். அப்போது அந்தப் பிள்ளை சொன்னது "அம்மா நான் நிற்கச் சொன்னேன் சங்கீதா தான் அம்மா தேடுவாரென்று சொல்லிக் கொண்டு போனவள் என்று".

மழை விடவில்லை. சங்கீதாவின் தாய் வீட்டிற்குத் திரும்பி விட்டார். சங்கீதாவுக்கு நடந்தது இதுதான். மழையிலே அவள் நனைந்து கொண்டு வரும்போது ஓட்டோவிலே வந்த இரண்டு பொடியன்கள் சங்கீதாவை இழுத்து ஓட்டோவில் போட்டுக் கொண்டு ஒரு பழைய கட்டிடத்திற்குள் கொண்டு போய் வல்லுறவுக்குட்படுத்தியதோடு கழுத்தை நெரித்துக் கொன்றும் போட்டார்கள்.

காலத்தின் சீரகேடு இப்படியாகிக் கிடக்கின்றது. பிள்ளை எப்படியும் வீட்டிற்குப் போயிருப்பாள் என்னும் நிலையோடு சங்கீதாவின் தாயார் வீட்டிற்குப் போய் கொண்டிருந்தார். எப்படியோ மழை அடித்தபோதும் வீட்டு வளவிற்கு வந்தவர் கொட்டிலுக்குள் கால் வைத்த போது திடீரென்று பாரிய மண்சரிவு. அப்படியே வீட்டையும் மூடிக்கொண்டு சரிந்தது.

தான் அன்பு செய்த தன் உயிருக்கும் மேலான மகளுக்கு என்ன நடந்ததென்று கூடத்தெரியாமல் அந்தத்தாய் மண்ணோடு மண்ணாக மண்ணுக்குள் மறைந்துவிட்டார்.

(கற்பனையே)

## தூய மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தவக்காலத் தியானம்

இந்நிகழ்வானது எம் நாட்டின் தூயவராம் தூய யோசேப் வாஸ் முனிந்திரர் தடம் பதித்த இடமாகிய மூதூர், வேதத்தீவினிலே 10.04.2017 அன்று இடம்பெற்றது. இதன்போது சிலுவைப்பாதை தியானமும் அதனைத் தொடர்ந்து சிறிய மறை உரையுடன் கூடிய திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. இத்தியான நிகழ்விலே எமது உதவிப் பங்குத்தந்தை ரொயிஸ்டன் அடிகளார் அவர்களும் மூதூர் உதவிப்பங்குத்தந்தை செபஸ்டியன் OFM.. Cap அடிகளாரும் மற்றும் பேராலய CYA உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு சிறப்புற அமைய மூதூர் CYA உறுப்பினர்கள் சிறந்த உதவியினை நல்கியிருந்தனர்.

தகவல் : செயலாளர், இளைஞர் ஒன்றியம்,
தூய மரியாள் பேராலயம்

புகைப்படம் 12ம் பக்கத்தில்........

## மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஞாயிறு பங்குகளின் காணிக்கை விபரம் – 2017

| இல. | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 01. | தூய லூர்து அன்னை ஆலயம், பாலையூற்று | 47,301.00 |
| 02. | தூய மரியாள் பேராலயம் | 43,292.00 |
| 03. | இறை இரக்க திருத்தலம், அலஸ்தோட்டம் | 17,100.00 |
| 04. | குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை | 15,050.00 |
| 05. | தூய குவாடலூப்பே அன்னை ஆலயம், சின்னக்கடை | 11,330.00 |
| 06. | தூய சூசையப்பர் ஆலயம். நிலாவெளி | 9,957.00 |
| 07. | தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல்தீவு | 8,720.00 |
| 08. | திரு இருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரம் | 6,000.00 |
| 09. | தூய வனத்து அந்தோனியார் ஆலயம், செல்வநாயகபுரம் | 4,770.00 |
| 10. | தூய அந்தோனியார் ஆலயம், சீனக்குடா | 3,750.00 |
| 11. | தூய அந்தோனியார் ஆலயம், மூதூர் | 3,350.00 |
| 12. | கிறிஸ்து அரசர் ஆலயம், கன்னியா | 3,000.00 |
| 13. | தூய பற்றிமா மாதா ஆலயம், தம்பலகாமம் | 2,300.00 |
| 14. | தூய சதாசகாயமாதா ஆலயம், கந்தளாய் | 2,000.00 |
| 15. | தூய செபமாலை மாதா ஆலயம், குச்சவெளி | 1,000.00 |
| | முழுத்தொகை | 178,920.00 |

தகவல்: அருட்தந்தை அன்ரூ ஸ்ரீபன்
நிதிப்பொறுப்பாளர், ஆயர் இல்லம்,
உவர்மலை, திருகோணமலை

தொடர் - 04

# நல்லாசிரியர்: ஆளுமையும்



# இறைவனை நாடும் ஆசிரியர்

**அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி** (BTh,B.A. (Hons), PGDE, MEd)

வயதில், நடத்தையில், சமூகப் பொருளாதாரப் பின்னனியில், அறிவில், பல்வேறு வகைப்பட்ட மாணவர்களோடு ஆசிரியர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பது அவ் ஆசிரியரின் அறிவிலும், அனுபவத்திலும், கல்வித் தகைமையிலும் தங்கியுள்ளது. ஆண் ~ பெண், பணக்காரன் ~ ஏழை, இனம், மதம் என்பவற்றை தாண்டி மாணவர்களுக்குள்ளே பொதுத்தன்மை உள்ளது. அது என்னவென்றால் "எல்லாப் பிள்ளைகளும் கடவுளின் பிள்ளைகள்" என்பதே. பிள்ளைகள் ஏதோ ஒரு வகையில் கடவுளுக்குள் வாழ்கின்றனர், கடவுளும் அவர்களில் வாழ்கின்றார்.

மாணவர், ஆணோ, பெண்ணோ, பாடசாலையில் அவர்களே மிக முக்கியமாணவர்கள் என்பதை வலியுறுத்துவது இங்கு மிக அவசியமாகின்றது. பாடசாலையை அதிபர் நிர்வகிப்பார், தீர்மாணங்கள் எடுப்பார், கட்டளைகளை கொடுப்பார், தங்களால் முடிந்தளவு ஆசிரியர்கள் கற்பிப்பார்கள், சிற்றூளியர்கள் பாடசாலையை துப்பரவாகவும், அழகாகவும் பராமரிப்பர். ஆனால்பாடசாலையின் வெற்றி என்பது கல்வி பெறுபேற்றிலோ, விளையாட்டு பெறுபேற்றிலோ, பாடசாலையைப் பற்றிய சமூக மதிப்பிலோ மட்டும் தங்கியிருக்கவில்லை. கடவுளின் பார்வையில் பாடசாலையின் வெற்றி என்பது பாடசாலையை விட்டு வெளியேறும் ஒவ்வொரு மாணவரிலும் அப் பாடசாலையானது ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தை பொறுத்தாகும். பாடசாலையை விட்டு வெளியேறும் ஒவ்வொரு பிள்ளையும் புனிதராக வேண்டுமென நாம் இங்கு கருதவில்லை ஆனால் ஒவ்வொரு பிள்ளையும் தமது திறமைகள், ஆற்றல்களுக்கேற்ப தன்னை வளப்படுத்தி கொள்ள வேண்டும்.

பாடசாலையிலும், வகுப்பறை சூழலிலும் வழங்கப்படும் கற்றல் சந்தர்ப்பங்கள் ஒவ்வொரு பிள்ளையையும் நேர் மறையாகவோ, எதிர் மறையாகவோ பாதிக்கின்றது. ரவீந்திரநாத் தாகூர் தனது கற்றல் நாட்கள் பற்றி குறிப்பொன்றை விட்டுச் சென்றிருக்கின்றார்."கல்கத்தா புனித சவேரியார் கல்லூரியில் படிக்கும் போது பாடவேளையில் தாகூர் தூங்கி விட்டார். கற்பித்துக் கொண்டிருந்த விரிவுரையாளர்,(அவர் ஒரு குருவானவர்) கூரிடம் வந்து அவரது தோள்களை மென்மையாக தொட்டு "தாகூர் உமக்கு சுகமில்லையா?" என்று கேட்டார். அந்த தொடுகையும் அனுதாபமான வார்த்தைகளும் பல நல் அறிவுரைகளை விட மேலான தாக்கத்தை தமது பிற்கால வாழ்க்கையில் ஏற்படுத்தியதாக தாகூர் கூறியுள்ளார்.

இக் காலத்தில் நிலைமைகள் வெகுவாக மாறிவிட்டன இக் கட்டுரையை வாசிப்பவர்களில் பலர் ஆசிரியர்களாக இருக்கக்கூடும். இவ்வாறான அணுகுமுறை பல்கலைக்கழக மட்டத்திற்கு பொறுத்தமாகலாம், பாடசாலை மட்டத்திற்கு பொறுத்தமாகுமா? என கேள்வி எழுப்பலாம். இங்கு உதிரியான ஒரு தனிப்பட்ட செயலை குறிப்பிடவில்லை மாறாக இச்செயலுக்கு பின்னனியில் காணப்படும் மனப்பாங்கை உற்று நோக்கவேண்டும். மேற்குறிப்பிட்ட விரிவுரையாளராகிய குரு தனது மாணவரை அன்போடு கூடிய அக்கறையோடு அணுகியிருக்கின்றார். இவ்வாறான மனப்பாங்கை கொண்டிருக்க குருவாகவோ, விரிவுரையாளராகவோ இருக்க வேண்டும் என்பதல்ல சாதாரண பாடசாலை ஆசிரியராக கூட இருக்கலாம் இந்த சம்பவத்திலிருந்து இன்னுமொன்றையும் நாம் கற்றுக் கொள்ள முடியும். அந்த விரிவுரையாளர் தனது மாணவரை அன்போடும் அக்கறையோடும் மட்டும் நோக்கவில்லை அவர்களுக்குரிய மரியாதையையும் கொடுத்திருக்கின்றார். தாகூர் அந்த வகுப்பறையில் சாதாரண ஏனைய மாணவர்களை போல்தான் இருந்திருப்பார். அவர் பெரிய மகானாக பிற்காலத்தில் வருவாரென அவ் விரிவுரையாளர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எல்லா மாணவர்களையும் மதிப்பது போல் தாகூரையும் மதித்திருக்கின்றார். அவர் கொடுத்த மதிப்பும் மரியாதையும் பிற்காலத்தில் ஒரு பெரிய மகானையே உருவாக்கியது என கொள்ளலாம். அன்பு, கரிசனை, கவனிப்பு, மரியாதை போன்றவை மாணவர் மட்டில் ஒரு ஆசான் கொண்டிருக்க வேண்டிய இன்றியமையாத மனோபாவமாகும். அனேகமாக இரக்கத்தினூடாகவும், இறுக்கமான, உறுதியான தண்டனைகளின் மூலமும் மேற்குறிப்பிட்ட பண்புகள் பல்வேறு வகையில் வெளிப்படுத்தப்படலாம். விழிப்பாகவும் நுண்ணறிவுடனும் உள்ள மாணவர்கள் ஆசிரியரின் உள்ளத்திலிருந்து புறப்படும் இப் பண்புகளை கண்டுகொள்வார்கள். இது எவ்வளவு கடினமானதென நாம் உணர்ந்து கொள்ளலாம். முரட்டுத்தனமான மாணவர்கள் அனேகம் பேர் இருக்கின்ற இடத்தில் இது சாத்தியமாகாதது போல் தோன்றலாம். தாகூரின் ஆசிரியரை நாம் அப்படியே பின்பற்ற வேண்டும் என்பதல்ல ஆனால் அவரின் மனோ பாவத்தை ஆசிரியர் உள்வாங்கிக் கொள்ளலாம்.
பின்வரும் விடயங்களை ஆசிரியர் நினைவிற் கொள்வது விரும்பத்தக்கது.

ஒவ்வொரு மாணவனும் இறைவனின் பிள்ளை

- ஏதோ ஒரு வகையில் இறைவன் ஒவ்வொரு பிள்ளையிலும் பிரசன்னமாய் இருக்கின்றார்.
- பாடசாலையில் பிள்ளைகள் முக்கிமான நபராக இருக்கின்றனர்

தொடரும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்க தொடர்ச்சி ......... துறவற வாழ்வில்

பங்குகளிலும் நிறுவனங்களிலும் அளப்பரிய பணியாற்றியுள்ளார். திருகோணமலை, பாலையூற்று, அன்புவழிபுரம் பங்குகளில் பங்குத்தந்தையாகவும், மரியாயின்சேனையின் ஆன்ம இயக்குனராகவும் பணியாற்றியதோடு, திருகோணமலை மறைமாவட்ட பங்குத்தளங்களில் முதியோர் சங்கங்களை உருவாக்கியவரும் ஆவார். தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் முதியோர் சங்கங்கள் சமாசத்தின் ஆன்ம இயக்குனராக பணிபுரிகின்றார். துறவற வாழ்வில் 50 வருடங்களை நிறைவு செய்யும் அல்பன் அடிகளாருக்கு, மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் நல்வாழ்த்துக்களோடு, திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையும், பாலையூற்று, அன்புவழிபுரம் மரியாயின்சேனை, முதியோர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் எங்கள் செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். அடிகளாரின் ஆன்ம உடல், உள நலத்திற்காக செபிக்கும்படி அனைவரையும் அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

துறவற சபைக்குருக்கள் கன்னியர்கள் தமது துறவற வாழ்வுக்காலத்தை கணக்கிடும் வழக்கம் உள்ளது. அல்பன் அடிகளார் தனது துருத்தவ பொன்விழாவை (50 வருட நிறைவு) காண்பதற்கு இன்னும் 7 வருடங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

1ம் பக்க தொடர்ச்சி..... தேசிய கல்வி நிறுவகத்திற்கு

மேலும் இவர், 01. 08. 2008 ~ 05. 03. 2012 வரை ஆசிரியராக தி/சரஸ்வதி வித்தியாலயம், கப்பல்துறையிலும், 16. 03. 2012 ~ 15. 01. 2017 வரை தி/தூய சூசையப்பர் கல்லூரியில் அதிபராகவும், 16. 01. 2017 ~ 26. 05. 2017 வரை வலயக்கல்வி அலுவலகத்திலும் (திட்டமிடல் பிரிவு) பணியாற்றிய பின் 29.05.2017ல் இருந்து தேசிய கல்வி நிறுவகத்திலும் (N.I.E) பணியாற்றி வருகின்றார். திருகோணமலை மாவட்டத்திற்கு இவர் ஆற்றிய பணிகளுக்காக நன்றியும் வாழ்த்துக்களும் கூறுவதுடன் அவரது பணி மேலும் மேலும் வளர நல்லாசீர்களும் செபங்களும் உரித்தாகட்டும்.

## கடந்த மாத இதழில் பிரசுரிக்கப்படாத விபரம்.........

திருகோணமலை மறைமாநில பங்குகள், கன்னியர் இல்லங்கள் மற்றும் ஆணைக்குழுக்களிடமிருந்து எகெட் கித்தாஸ் பணியகத்தினூடாக சேகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான தவக்கால ஒறுத்தல் சேமிப்பு விபரம்.

1. அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் இல்லம் ~ மூதூர் ~ 2,500.00

தகவல் : முகாமைத்துவம்
எகெட் கித்தாஸ்
திருகோணமலை

# குட்டிக்கதை ஒன்று

F.r. N.C

இரண்டு சகோதரர்கள், இருவரும் பாடசாலைக்குச் செல்பவர்கள். ஒருவர் படிப்பிலே கூடிய அக்கறை காட்டுபவர்.இரவெல்லாம் விழித்திருந்து படிப்பான். அதிகாலையில் நேரத்தோடு எழுந்து படிப்பான். மற்றவர் படிப்பிலே அவ்வளவு அக்கறை இல்லை. நேரத்தோடு படுப்பான். நேரம் சென்று எழும்புவான். வீட்டிலே யார் சொன்னாலும் படிக்கமாட்டான்.

இருவரும் பரீட்சை எழுதுகிறார்கள். பரீட்சை முடிவு வெளியாகின்றது. விழித்திருந்து நேரத்தை செலவிட்டு படித்தவன் சிறந்த சித்தியைப் பெறுகின்றான். மற்றவனோ பரீட்சையில் தவறிவிடுகின்றான்.

பார்த்தீர்களா "கல்வி என்னும் பயிருக்கு கண்ணீர் என்னும் மழை வேண்டும்" என்பது உண்மைதானே.

## வெற்றியைக் காணவே......FR.NC

- கவிதை வரிகளை
- வேறு ஒரு தாளில் சரியாக வடிவமையுங்கள்
- இருவரிகள் மட்டுமே மாறி உள்ளன
- இலக்கங்களைப் போட்டு வடிவமைத்தால்
- அது போட்டியில் சேர்க்கப்படமாட்டாது

**இதோ கவிதை வரிகள்**

வெற்றியின் கனிகளைத் தந்திடுமே
அன்பெனும் உணர்வு மனங்களிலே
பேதங்கள் மனங்களிலே இல்லாமல்
வேதங்கள் கூறிய வழிகளிலே
வாழும் போது வாழ்வு அது
ஆழமாய் பதிந்து உறுதிபெற
வாழ்வது வெற்றியைக் கண்டிடுமே

**சரியாக வடிவமையுங்கள்**

- எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
- குலுக்கல் மூலம் தெரிவு இடம் பெறும்

முதலாம் இடம் ~ 500/= ரூபா
இரண்டாம் இடம் ~ 300/=ரூபா
மூன்றாம் இடம் ~ 200/=ரூபா

முடிவுத் திகதி 25.07.2017

1ம் பக்க தொடர்ச்சி........... பிறர் பணியில் இறை மடியில்

குழப்படிகளுக்கு மத்தியிலும் குருவாக வர முடியும் என்ற சாதனை படைத்த இவர் குருத்துவ பயிற்சிகளின் பின் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் 27வது வயதில் 1951ம் ஆண்டு குருப்பட்டம் பெற்று அம் மறைமாவட்டத்தில் 1968 வரை பணியாற்றினார். 1968இல் திருகோணமலை ~ மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இணைந்து தனது பணிகளை முறையே மூதூர் , சின்னக்கடை, புனித வளனார் சிறிய குருமடம், தேற்றாத்தீவு, தாண்டவன்வெளி ஆகிய பங்குகளில் வன்செயலின் மத்தியிலும், இனக்கலவரத்தின் சூழ்நிலையிலும் துணிவுடன் பணியாற்றினார்.

வறுமைப்பட்ட நோயாளரின் நிலையறிந்த சீலோவாம் என்ற மருத்துவமனையை சில நல்ல உள்ளம் படைத்த சமூக சேவையாளர்களின் ஆலோசனையுடனும் முன்னைநாள் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் துணையுடனும் உருவாக்கினார். அது இன்றும் அவரது பெயரை நினைவூட்டி நிற்கின்றது.

முதியவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்ட அவர் அவர்களை பராமரிக்கும் பொறுப்பினை மேற்கொண்டு பரிபூரணம் என்னும் முதியோர் இல்லத்தை திறந்து பல முதியோர்களின் ஏக்கத்தையும் தாக்கத்தையும் நீக்கினார்.

**அருட்தந்தையின் ஆன்மா அமைதியடைய**
**இறைவனை வேண்டுவோம்**

- திருமலைத்தீபம் -

# சமாதானமும் நல்லிணக்கமும்

எம் நாட்டில் நல்லிணக்கம் நிகழ்கின்றதாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அவர்களும் அவரோடு இணைந்த சட்டசிக்காரர்களுமே கூறி வருகின்றனர் ஆனால் நம் நாட்டில் சமாதனமும் நல்லிணக்கம் நிகழ்கின்றதா என்று தெரியவில்லை.

எமது குடும்பங்களில் எப்போதும் சண்டை சச்சரவு, அப்பா அம்மாவுக்கு அடித்தல் சில குடும்பங்களில் அம்மாதான் அப்பாவுக்கு அடிக்கின்றார்கள், பெற்றோர் குழந்தைகளை பார்க்கும் விதம் சில பிள்ளைகளை அன்பாகவும் மற்றைய பிள்ளைகளை இழிவாகவும் பார்க்கின்றனர் இவ்வாறு குடும்பங்களிலே ஒரு நல்லிணக்கம் இல்லா விட்டால் எவ்வாறு இருக்கும். ஏனெனில் சமூகத்தின் சிறிய அலகு குடும்பமே ஆகும். இதன் போது எம் பிள்ளைகள் சிறிய வயதில் இருந்தே நெஞ்சங்களை கடினப்படுத்திக்கொள்கின்றனர்.

பெரியவர்கள் தங்களுக்குள் சமாதனத்தையும் நல்லிணக்கத்தையும் கடைபிடிக்காவிட்டால் அவர்களை எவ்வாறு பெரியவர்கள் எனலாம் அவர்களைப் பார்த்து உருவத்தில் பெரிய மரக்கட்டைகள் என்றே கூறலாம். இவர்கள் உயிர இருந்தும் சடமானவர்கள். உடலிருந்தும் உணர்ச்சி அற்றவர்கள் ஒரு பிள்ளை இருந்தும் சுயநலமாக பணத்தை வைத்துக் கொண்டு மற்றைய பிள்ளைகளை வளர்த்து விட தயங்குவார்கள். " ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தல் தன் பிள்ளை தானா வளரும்" என்ற கூற்றின் படி நடந்தாலே போதும் அதைப்பார்த்து பிள்ளைகளும் சிறுவயதில் இருந்து நண்பர்களுக்குள் ஒற்றுமையை பேணிக் கொள்வார்கள்.

எம் நாட்டில் நான்கு மதங்கள் காணப்படுகின்றது. அதாவது கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்தம் எனும் மதங்கள் உள்ளபோதும் அவர்கள் ஏதோ வேறு நாட்டில் இருப்பது போன்று தங்களுக்குள் வேற்றுமையை காட்டி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தியா, பாக்கிஸ்தான் என்று போட்டி போட்டு வாழ்தல் பரவாயில்லை. ஆனால் பொறாமையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் நம் நாட்டில் சமாதானமும் நல்லிணக்கமும் கொண்டு வாழ்பவர்களை எள்ளளவே காணக்கூடியதாக உள்ளது. சில சமயத்தவர்கள் ஏதோ தம் சமயம் மட்டுமே சிறந்தது, பெரிய ஒழுக்கம் மிக்கது என்று கர்வம் கொண்டு ஏனைய சமயங்களை ஏளனமாகப் பார்த்து அவர்களை புறந்தள்ளுகின்றனர்.

எம் நாட்டிலும் வேறு நாடுகளிலும் அதாவது உலகம் பூராகவும் சமாதானத்திற்காக கார்த்திகை மாதம் 11ம் திகதி அன்று ஒரு நாளை ஒதுக்கி உள்ளது. வளர்ந்து வரும் சமுதாயத்தில் நாம் பார்க்கும் போது "ஒற்றுமையே பலம் " எனும் பழமொழியின் படி வாழ்வோர் அரிசியில் கல் பிடிப்பது போன்றே நாம் எம் கண்களால் பார்க்கின்றோம்.

எனவே எம் நாட்டிலும் சரி ஏனைய நாடுகளிலும் சரி நாம் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கடைபிடித்து வாழ்வோம். இறைவனின் சமாதானத்தை உங்கள் உள்ளத்தில் வைத்து செயல் ஆற்றுவோம்.

ஆக்கம் : யரியட்னா
தரம் ~ 11
திரு இருதயநாதர் வித்தியாலயம்
இருதயபுரம்

## இரு சொற்போட்டி – FR NC

எல்லோரும் பங்கு கொள்ளலாம்

- ☐இவற்றின் விடைகளை
- ☐வேறு ஒரு தாளில் எழுதுங்கள்
- ☐எல்லோரும் சரியாக விடையளித்தால்
- ☐குலுக்கல் மூலம் தெரிவு
- ☐ஒன்று சரியானால் ரூபா 50/-
- ☐எல்லாம் சரியானால் ரூபா 500/-
- ☐1ம் பரிசு ரூபா 500/-
- ☐2ம் பரிசு ரூபா 300/-
- ☐3ம் பரிசு ரூபா 200/-

இதோ கண்டுபிடியுங்கள்

| | | |
|---|---|---|
| 1.இருமுதுகுரவர் | I. | II. |
| 2.இருவகைப்பற்று | I. | II. |
| 3.இருவகை அறம் | I. | II. |
| 4.இருபிறை | I. | II. |
| 5.இருநிதி | I. | II. |
| 6.இரு கனவு | I. | II. |
| 7.இருசுடர் | I. | II. |
| 8.இருமை | I. | II. |
| 9.இருவினை | I. | II. |
| 10.இருமரபு | I. | II. |

முடிவுத்திகதி 25.07.2017

*உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்பார்க்கின்றோம். அவற்றை திமலைத் தீபத்திற்கு அனுப்பி வைக்கவும்.*

*குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத் தந்தையின் அனுமதியுடன் அனுப்பிவையுங்கள்.*

*அனுப்ப வேண்டிய முகவரி :- ஆசிரியர் , திருமலைத் தீபம் 297, டொக்யார்ட் வீதி, திருகோணமலை.*

## எனது புனிதர் பதுவையின் அந்தோனி

வார்த்தைகள் அவர்
நோக்கி உச்சரிக்க
வரங்கள் கோடி தந்திடும்
புனிதர் இவர்

சோகங்கள் சுமந்து வந்து
சொல்லி விட்டு திரும்பினால்
அவன் காற்றிடை வெளியில்
சிறகாய் மிதந்து போவான்

எனது புனிதன் பரிந்துரை போதும்
யாதும் அவர் கேட்டால்
ஏந்தும் தெய்வீக குழந்தை
எம்மை கையேந்த விடமாட்டார்

நான் பெற்ற வரம்
சொன்னால் கண்ணால்
விழும் துளிகள்
தரை மோதினால்
பூமி மூழ்கிப் போகும்

தேடிச் செல்
தோற்ற தருணங்கள்
தொலைந்து போகும் நீயும்
தேற்றுதல் பெறுவாய்



சி.ஜெனிபர்
சகாயபுரம்,
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் பக்கத் தொடர்ச்சி............ மதத்தலைவர்களின் ..........

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினரால் மதத்தலைவர்களைக் கொண்டு ஆரம்பமானது. இதற்கு வணக்கத்திற்குரிய ஆயர் அதிவந்தனைக்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் எகெட் கரித்தாஸ் பணிப்பாளர் வணக்கத்திற்குரிய அருட்தந்தை க.நிதிதாசன், புனித மரியாள் பேராலயப் பங்குத்தந்தை வணக்கத்திற்குரிய அருட்தந்தை ஜூட் ஜோண்சன், பௌத்த மதத் தலைமைப்பீட வணக்கத்திற்குரிய மகிந்தானந்த தேரர் அவர்களும், இஸ்லாம் மதத்தின் மௌலவி H.M.சாஜகான் அவர்களும், இந்து மத குருக்கள் A.சுப்பிரமணியசர்மாமற்றும் மு.பாலகிருஷ்ணா அவர்களும், அரச உத்தியோகத்தர் ஜனாப் H.M.இர்பான் அவர்களும் சமூகமளித்தனர். நான்கு கிராமங்களைச் சேர்ந்த மூவரடங்கிய குழுக்களும், எகெட் கரித்தாஸ் நிறுவன சகல உத்தியோகத்தர்களும் சமூகமளித்தனர்.

நோக்கம் தற்போது இனங்கள், மதங்களுக்கிடையில் இருக்கும் பிளவுகள் நீங்கவும், இனங்களுக்குள் ஒற்றுமை, மதங்களுக்குள் நல்லிணக்கம், மக்களுக்கிடையே நல்லுறவு ஏற்பட வேண்டுமென்றநல் நோக்கிலேயே இப்படியான கலந்துரையாடலை ஒழுங்கு செய்ததாக வணக்கத்திற்குரிய ஆயர் வெளிப்படுத்தினார். பணிப்பாளரும் தற்போது இனங்களுக்கிடையே பாரிய இடைவெளி ஏற்படுவதாகவும் இதன் பாதிப்பு சகல மக்களுக்குமே. இதனால் இன நல்லுறவை ஏற்படுத்துவது மதகுருமார் சகலருக்குமான கடமை என தெரிவித்தார். பௌத்த மதத் தலைமைப்பீட வணக்கத்திற்குரிய தேரர் அவர்கள் தனது கருத்தைத் தெரிவிக்கையில் முதலில் இனங்களுக்கிடையில் நல்லுறவு ஏற்பட வேண்டுமெனக் கூறினார்.

மேலும் நானும் அநேக வருடங்களாக யாழ் நகரில் இருந்ததாகவும், அம்மக்கள் தன்னுடன் மிக அன்பாகப் பழகினார்களேயொழிய பகைமை உணர்விருக்கவில்லை. ஒரே குடும்பத்தினர் போல் இருந்தோம். கொண்டாட்டங்களின் போதும் இதே போன்று தான் நன்கு உபசரித்தனர். இந்த மனிதர்களுக்குள் பிளவுகள் உண்டாகக் காரணமானவர்கள் அரசியல்வாதிகளேயொழிய வேறொருவருமில்லை. மக்கள் இவர்கள் மட்டில் விழிப்பாக இருக்க வேண்டுமென்று கூறினார். இஸ்லாமிய மதகுரு மௌலவி H.M சாஜகான் அவர்கள் தனது கருத்தைத் தெரிவிக்கையில் மக்களிடையே புரிந்துணர்வு இன்மையினால் இடைக்கிடையே மனக்கசப்புக்கள் ஏற்படுகின்றது. அவைகளை மறந்து, சகல இனங்களும் ஒற்றுமையாக விட்டுக்கொடுப்புடன் வாழ்ந்திட வேண்டுமெனக் கூறி மதத்தலைவர் மத அனுஸ்டானங்களில் மட்டும் நின்றுவிடாது மக்களுக்கு நல்ல போதனைகளைப் போதிக்க வேண்டுமெனக் கூறினார்.

இந்து மதகுரு A.சுப்பிரமணியசர்மா அவர்கள் கருத்தைத் தெரிவிக்கையில் மூவினமக்கள் வாழும் இலங்கையில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக, ஏனைய மதங்களை மதித்து இன, மத பேதமின்றி வாழ வேண்டும். வணக்கத்திற்குரிய அருட்தந்தை ஜூட் ஜோண்சன் அவர்கள் எமது நோக்கம் ஒரு சமயத்தவருக்கு மட்டும் உதவி புரிவதல்ல. மாறாக உதவிகோரிவரும் எவருக்கும் உதவிக்கரம் நீட்டுவதே. இது போன்ற சமூகத்தில் வாழ்பவர் அனைவருக்கும் எகெட் கரித்தாஸ் நிறுவனமும் இன மத பேதமின்றி தனது சேவையினைப் புரிந்து வருகின்றது எனக் கூறினார்.

விசேடமாக இங்கு வளவாளராகச் சமூகமளித்த திரு.S.மதியழகன் அவர்கள் தான் வாசித்த புத்தகத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். ஒரு வயதான மனிதன் கையில் ஒரு விளக்குடன் நகர்புறத்தில் எதையோ தேடுவதைப் போன்று வீதியில் சென்றார். இதைப்பார்த்த வீதியில் சென்ற ஒருவர், ஐயா நீங்கள் யாரைத் தேடுகின்றீர்கள் எனக் கேட்க, அவரும் நான் மனிதனைத் தேடுகின்றேன் என்றாராம். பின் வேறொரு வீதியில் இதே போன்று செல்லும் போது மக்கள் இவரிடம், ஐயா நீங்கள் யாரைத் தேடுகின்றீர்கள் எனக் கேட்க, அவரும் நான் மனிதனைத் தேடுகின்றேன் என்றாராம். பின் அழுக்கு நீர் தேங்கி நின்ற குழியைச் சுத்தம் செய்தவரும், ஐயா நீங்கள் யாரைத் தேடுகின்றீர்கள் எனக் கேட்க, அவரும் நான் மனிதனைத் தேடுகின்றேன் என்றாராம். அவர் ஐயா நீங்கள் இவ்விடத்தை விட்டு அப்பால் செல்லுங்கள் ஏனெனில் எனக்கு வருத்தம், கடி, சிரங்கு, துர்நாற்றம் உள்ளது. உங்களுக்கும் தொற்றிவிடும் எனதருகில் வராதீர்கள் நோய் தொற்றும் எனக் கூறினார்.

உடனே அம்மனிதர் சுகயீனமுற்ற மனிதரைக் கண்ட சந்தோஷத்தில் இப்போது தான் ஒரு நல்ல மனிதரைக் கண்டேன். இவர் கூறிய வார்த்தைகள் தனக்குப் பிடித்தது எனவும், ஒரு நல்ல மனிதரைக் காணுவதெல்லாம் இது போன்று பகலில் விளக்கைக் கொளுத்தித் தேடுவது போலாகும் எனக் கூறினார். மதங்கள் கூறுவதும் மனிதனைச் சிந்திக்க வைக்கும் நல்ல விடயங்களைத் தான். ஆனால் மக்கள் தான் விரிந்து நல்லிணக்கம், புரிந்துணர்வு, தனது மதம் தான் பெரிது எனக் கூறி பிளவுகளை ஏற்படுத்துகின்றார்கள். இது தான் சகல தவறுகளுக்கும் காரணமாக அமைகின்றது.

முடிவில் சமூகமளித்த பொது மக்களது கேள்விகளுக்கு மதத்தலைவர்கள் தகுந்த விளக்கத்தை அளித்தனர். இறுதியில் திரு.கு.பிரகலாதன் அவர்களின் நன்றியுரையுடன் கலந்துரையாடல் இனிதே நிறைவேறியது.

தகவல் : இயக்குனர்,
எகெட் கரித்தாஸ், திருகோணமலை.

புகைப்படம் 1ம் பக்கத்தில்.................

# தூய யோசேப் வாஸ் ஆண்டு

- தொடக்கத்திலிருந்து திருஅவை (திருச்சபை) தனது தனித்துவத்தை தூய நற்கருணைக் கொண்டாட்டத்திலிருந்து பெறுகின்றது.
- திப 2:42 துன்பம் நிறைந்த காலங்களிலும் தொடக்க கிறிஸ்தவர்கள் தமது நம்பிக்கையையும் அர்ப்பணத்தையும் நற்கருணையை மையப்படுத்தி வைத்திருந்தனர்.
- அந்நாட்களில் 30 வருடங்களாக இலங்கையில் கத்தோலிக்கரால் நற்கருணை விருந்து கொண்டாடப்படவில்லை. அதை நிறைவேற்ற இலங்கையில் குருக்கள் இருக்கவில்லை.



- தூய யோசேப் வாஸ் இலங்கைக்கு ஓர் கூலியாக வந்த போதுஅவர் கொண்டு வந்த பொருட்கள் திருப்பலிக்கான பொருட்களே.
- குருவானவர்கள் இல்லாத போது இறைவாக்கு வழிபாட்டை மக்களுக்கு தவறாமல் நடாத்த அவர் மூப்பர்களைப் பயிற்றுவித்தார்.
- திரு அவை நற்கருணையை வாழ்ந்து காட்டுகின்றது, நற்கருணை திருஅவையை கட்டியயெழுப்புகின்றது என்பதை தூய யோசேப் வாஸ் நம்பினார்.

- தூய யோசேப் வாஸ் சிறுவனாக இருந்த போதே நற்கருணை ஆண்டவரில் ஆழமான பக்தி கொண்டிருந்தார். அதிகாலையிலேயே அவர் ஆலயத்திற்குச் செல்ல ஆலயத்தின் பெரிய கதவுகள் தானாகவே திறக்கும். ஆலயத்தினுள் அவர் பலமணி நேரம் செபிப்பார்.
- அவர் இலங்கை வந்த போது முதல் கிறிஸ்மஸ் திருப்பலியின் போது 150க்கும் அதிகமானவர்கள் ஒல்லாந்தரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள். இவர்கள் நற்கருணைக்குச் சான்று பகர்ந்தவர்கள்.
- ஒன்பது வருடங்களாக தனித்தும் பின் சில குருக்களின் உறுதியுடனும் இவர் இலங்கையின் பல பாகங்களுக்கும் பயணம் செய்ய எங்கும் நற்கருணை கொண்டாடப்பட்டது. அதுவே கிறிஸ்தவர்களுக்குப் பெரும் எழுச்சியாக மாறியது.



- நற்கருணை மீது தூய யோசேப் வாஸ் முனிவர் கொண்டிருந்த ஆழமான பற்று எந்தளவிற்கென்றால் : இந்தியாவில் கனரா எனும் இடத்தில் இவர் திருப்பலி நிறைவேற்றிய போது நிலத்திலிருந்து மேலே உயர்த்தப்பட்டார் என ஒரு இயேசு சபைக் குருவானவர் சாட்சியம் தருகின்றார். இவர் அன்று கோவாவின் பேராயரிடம் கூறி வைத்தார்.
- நற்கருணையை நாமும் நேசிப்போம். அதுவே எமது வாழ்வின் சக்தி என்பதை உணர்ந்து செயல்படுவோம்.



## நற்கருணையும் தூய யோசேப் வாஸ் முனிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய யோசேப் வாஸ்

**எமது நாட்டின் திருத்தூதரான தூய யோசேப்வாஸ் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை இன்று எம் நாட்டில் கத்தோலிக்க திருச்சபை நிலைத்து நிற்கின்றது என்றால் அதற்கு காரணம் தூய யோசேப் வாஸ் ஆவார். எனவே அவர் பற்றியும் அவரது பணி பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். இம்மாதம் அவர் பணிபுரிந்த மேலும் சில பகுதிகள், இடங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வோம்.**



### 1. கற்பிட்டி

தூய யோசேப் வாஸ் 1704 ஒக்டோபருக்கு முந்திய பகுதிகளில் கற்பிட்டியை தரிசித்தார். கற்பிட்டி போர்த்துக்கெயர் காலத்தில் கத்தோலிக்கர் செறிவாக வாழ்ந்த ஒரு பிரதேசமாகும். இது 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இயேசு சபைக் குருக்களால் குடியேற்றப்பட்ட ஒரு பிரேதசமாகும். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கலாசாரத்திலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கி இருந்ததால் குடியேற்றப்பட்ட மக்கள் இப்பிரதேசத்தை முன்னேற்றினர். தூய யோசேப் வாஸ் இப்பிரதேசத்தை பல முறை தரிசித்துப் பணிபுரிந்தார்.



### 2. நாவற்காடு, மாம்புரி, கட்டைக்காடு

கற்பிட்டியை அண்டிய இப்பிரதேசம் விவசாய நிலங்களை உள்ளடக்கிய தீபகற்பமாகும். ஒல்லாந்தர் இப்பிரதேசத்தைப் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றி முன்னேறிய போது 1660இல் கண்டி அரசனின் கீழ் இருந்த நாவற்காடு முன்னரண் காவல் நிலையங்களை கைப்பற்றி கற்பிட்டி வரை முன்னேறினர். அது முதல் தூய யோசேப் வாஸ் வரும் வரை குருக்கள் எவரும் இங்கு வர முடியவில்லை. எனினும் தூய யோசேப் வாஸ் பலமுறை இப்பிரதேசத்தை தரிசித்தார். இப்பிரதேசத்தில் 1690ம் ஆண்டு பணிபுரிந்த போது இங்குள்ள ஆலயங்களை புணரமைத்து மறைவேதியர்களை நியமித்து குருக்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் வழிபாடுகளை நடத்தவும் கற்பிக்கவும் ஊக்கப்படுத்தினார். ஒல்லாந்தருடைய கலாபனை-கள் குறைவாக இருந்ததால் ஓரளவு சுதந்திரமாக அடிகளார் பணிபுரிந்தார். தூய யோசேப் வாஸ் தனக்குப் பின் இப்பிரதேசத்தை அருட்தந்தை பிரான்சிஸ்கோ டொ இயேசுவுக்கு கையளித்தார்.



### 3. கல்கமுவ

1690ல் தூய யோசேப் வாஸ் இப்பகுதியைத் தரிசித்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. நீர்கொழும்பு போன்ற கரையோரப் பகுதிகளில் ஒல்லாந்தரால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்கரும் போர்த்துக்கேய வழிமரபினரும் இங்கு குடியேறிக் கண்டி அரசனுடைய ஆளுகையின் கீழ் நிம்மதியாக வாழ்ந்தனர். இன்றும் தூய யோசேப் வாஸ் பயன்படுத்திய சிலுவை இங்கு காணப்படுகின்றது.

### 4. பூநகரி

தூய யோசேப் வாஸ் இலங்கையில் தரையிறங்கிய காலத்திலிருந்து யாழ்ப்பாணத்திலிருந்த வெளியேறும் வரை பல முறை இரகசியமாக பூநகரியை தரிசித்துள்ளார். 15 டிசம்பர் 1691ல் ஒல்லாந்த அதிகாரி கென்றிக் வன் றீட் கடலில் மரணமானதன் பின் தூய யோசேப் வாஸ் வட இலங்கையில் ஓரளவு வெளிப்படையாக பணியாற்றினார். இக்காலத்தில் அவர் மீண்டும் பூநகரியைத் தரிசித்தார். இங்கு அதிகளவு கத்தோலிக்கர் வாழ்ந்தனர். தூய யோசேப் வாஸ் தனக்குப் பின் இப்பிரதேசத்தை அருட்தந்தை பெத்ரோ பெர்ராவோவுக்கு கையளித்தார்.

### 5. கொழும்பு



தூய யோசேப் வாஸ் முதன்முதலில் இந்தியாவிலிருந்து கொழும்பு செல்வதற்கே எண்ணியிருந்தார். (எனினும் அது யாழ்ப்பாணம் நோக்கிய பயணமாக மாறியது.) ஒல்லாந்தரின் வருகையால் கத்தோலிக்கர் இங்கு மிக அதிகமாக துன்புறுத்தப்பட்டனர். எனினும் மருத்துவரான சைமன் கொலசே போன்ற விசுவாசம் மிக்க கத்தோலிக்கர் தூய யோசேப் வாஸை மாறுவேடத்தில் கொழும்பிற்கு கூட்டிச் செல்லவும் பாதுகாக்கவும் உதவினர். முக்கியமாக மலிபன் வீதி அடிகளாரின் பணித்தளங்களில் ஒன்றாகும். அடிகளாரின் முதலாவது பயணம் எப்போது நடந்தது என்பது உறுதியாகத் தெரியவில்லை. வடபகுதியில் அருட்பணி மெனசெஸ் அடிகள் பணிபுரியத் தொடங்கிய பின் தூய யோசேப் வாஸ் கொழும்பில் தனது பணியை விரிவாக்கினார்.

### 6. களுத்துறை முதல் மாத்தறை வரை

தூய யோசேப் வாஸ் இப்பகுதியை ஒன்றுக்க மேறபட்ட தடவைகள் தரிசித்தார் என்பது அவர் கோவாவுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து தெரியவருகின்றது. மிகவும் அபாயமான இப்பகுதியில் தூய யோசேப் வாஸ் மாறுவேடத்தில் சென்று திரவருட்சாதனங்களை நிறைவேற்றினார். களுத்துறை மாவட்டத்தில் 07 ஆலயங்கள் 1706ம் ஆண்டில் இருந்ததாக ஒல்லாந்த ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாண்டில் இப்பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் தங்களது விசுவாசத்தை பாதுகாக்க பெருமளவு தண்டப்பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தூய யோசேப் வாஸ் தனக்குப் பின் இப்பிரதேசத்தை அருட்தந்தை மனுவல் டி மிராண்டாவுக்கு கையளித்தார்.

### 7. குருபாவில

சீதாவாக்கை ~ கொழும்பு வீதியில் கொழும்பிலிருந்து 18 மைல் தூரத்தில் குருபாவில அமைந்துள்ளது. தூய யோசேப் வாஸ் இலங்கையில் தரிசித்த முதலாவது ஒல்லாந்த நகரம் குருபாவில ஆகும். இங்கு போர்த்துக்கேயரின் பழைய கோட்டை ஒன்று காணப்பட்டது. கத்தோலிக்கருடைய ஒரு பலமான கோட்டையாக இவ்வூர் விளங்கியது. முதல்முறையாக இங்கு வந்த போது அடிகளார் திருவருட்சாதனங்களை மட்டுமே வழங்கக் கூடியதாக இருந்தது. தூய யோசேப் வாஸ் தனக்குப் பின் இப்பிரதேசத்தை அருட்தந்தை மைக்கல் டி மெல்லோவுக்கு கையளித்தார். இங்கு சிங்கள தமிழ் கத்தோலிக்கர் சேர்ந்து வாழ்ந்தனர்.

### 8. கண்ணொருவ

மகாவலி ஆற்றைக் கடந்து கண்டி நகருக்குச் செல்ல தோணி ஏறும் இடம் கண்ணொருவ ஆகும். (ஏனைய இடங்களாவன ~ கட்டுகஸ்தோட்ட, லேவல்ல, குண்டசாலை, அளுத்கஸ்தோட்ட). தூய யோசேப் வாஸ் பல தடவைகள் இந்த படகுத்துறை ஊடாக யாரும் அறியாதவாறு சாகும் தறுவாயில் இருப்போருக்கும், நோயுற்றோருக்கும் அருட்சாதனங்களை வழங்கச் சென்றிருக்கின்றார். கண்டிக்குச் சென்று ஒரு சில மாதங்களில் இவ்வாறு 8 தடவைகள் ஆற்றைக் கடந்து சென்றார். ஒறத்தோரியன் சபை குருக்களின் பணியில் கண்ணொருவ மிக முக்கியமான இடமாகும்.

### 9. யாழ்ப்பாணம்

மாதோட்டத்திலிருந்து அடிகளார் யாழ்ப்பாணத்தை சென்றடைந்தார். இங்கு ஏறத்தாள 20 மாதங்கள் பணிபுரிந்தார். எனினும் இங்கு ஒல்லாந்தருடைய கலாபனை காரணமாகக் கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டிருந்தன. இங்கு மாறுவேடத்தில் அடிகளார் தமது பணியை ஆரம்பித்தார். இங்கு அடிகளாரை வரவேற்று ஏற்றுக் கொண்ட விசுவாசம் மிக்க கத்தோலிக்கர் பாதுகாப்பாக இருக்க ஏற்பாடுகளை செய்தனர். எனினும் கலாபனை காரணமாக அடிகளார் கண்டி அரசனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த வன்னிப் பகுதிக்குத் தப்பிச்சென்றார். ஏறத்தாள 4 வருடங்களின் பின் மீண்டும் அவர் யாழ்ப்பாணம் சென்றார். இலங்கையில் தூய யோசேப் வாஸின் முதலாவத பணித்தளம் யாழ்ப்பாணம் ஆகும். யாழ்ப்பாணத்தில் அடிகளாரின் உன்னத பணிகளை அக்காலத்தில் மலபார் மாநில இயேசு சபை தலைவர் கோவா ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார்.





### 10. கம்மல

கொழம்பு ~ சிலாபம் வீதிக்கு மேற்குத் திசையில் 28 மைல் தொலைவில் கம்மல அமைந்துள்ளது. பல தடவைகள் தூய யோசேப் வாஸ் இப்பிரதேசத்தை தரிசித்தார். தூய யோசேப் வாஸ் தனக்குப் பின் இப்பிரதேசத்தை அருட்தந்தை மனுவல் டி மிராண்டாவுக்கு கையளித்தார்.


### 1. கட்டுகஸ்தோட்டை, குண்டசாலை,

இவை இரண்டும் கண்டி நகருக்கான படகுத்துறை நுழைவாயில்களாகும். கண்டி நகரில் அடிகளார் பணியாற்றிய போது நகருக்கு வெளியே இருந்த பணித்தளங்களை தரிசிக்க அடிகளார் இப்படகுத்தறைகளை பயன்படுத்தினார். பலமுறை கண்டி அரசனின் அனுமதியின்றி அவர் இவற்றின் ஊடாகப் பயணித்தார்.


### 12. கெந்தன்கமுவ,

கொழும்பு ~ இரத்தினபுரி வீதியில் 38 மைல் தொலைவில் கெந்தன்கமுவ அமைந்துள்ளது. ஒல்லாந்தரின் கலாபனைக் காலத்தில் கரையோரப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த கத்தோலிக்கர் கண்டி அரசனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பல நகரங்களில் குடியேறினர். கெந்தன்கமுவ இவ்வாறான ஒரு நகராகும். ஆரம்பத்தில் இங்கு ஆலயம் இருக்கவில்லை. இங்கு தூய அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயமொன்றை அடிகளார் கட்டினார். இவ்வாலயத்தை இடிக்க முற்பட்ட திசாவை அதிகாரி பாரிசவாத நோயினால் தாக்கப்பட்டார். இது கெந்தன்கமுவயிலும், அயல் பிரதேசங்களிலும் வாழ்ந்த கத்தோலிக்கரிடையே விசுவாச எழுச்சியாக அமைந்தது. இதன் விளைவாக குருபாவிலவில் அடிகளார் 2 வாரங்கள் தங்கிக் கத்தோலிக்கருக்கு மறை அறிவூட்டித் திருவருட்சாதனங்களை வழங்கினார். தூய யோசேப் வாஸ் மேற்கு நோக்கிய தனது மறைப் பயணத்தில் இவ்வூரை தரிசித்தார். மூப்பர், அண்ணாவி போன்றோரை நியமித்து விசுவாசத்திற்காக அவர்களைப் போராடச் செய்தார்.

### 13.திருகோணமலை



யாழ்ப்பாணப் பணியின் பின் அடிகளார் இலங்கையின் கிழக்குப் பகுதியை முதல்முறையாக தரிசித்தார். இதன்போது அவர் திருகோணமலையைத் தரிசித்தார். இங்கு போர்த்துக்கேயாரால் கட்டப்பட்ட கத்தோலிக்க ஆலயம் ஒல்லாந்தரால் அழிக்கப்பட்டிருந்தது. 1704 யூலை 04ல் மறைப்பயணத்தை ஆரம்பித்த அடிகளார் மீண்டும் திருகோணமலையைத் தரிசித்தார். 1710ம் ஆண்டு மீண்டும் அடிகளார் திருகோணமலையை தரிசித்தார். தூய யோசேப் வாஸ் தனக்குப் பின் இப்பிரதேசத்தை அருட்தந்தை யோசேப் டொ மெனசெஸ் அடிகளாருக்கு



**நாள் முழுவதும் இரவின் பெரும் பகுதியிலும் அருட்தந்தை வாஸ் அவர்கள் ஓய்வின்றி வேலை செய்வார். ஆனாலும் அவரைப் பீடத்தண்டையிலோ அல்லது பாவ அறிக்கை தொட்டியிலோ காண முடியாது. அப்படி அவர் என்ன வேலை தான் செய்தார் என்று வினவினால், கடவுளோடு செபத்தில் இணைந்திருப்பார் அல்லது அயலவர்களின் பணியில் தன்னை இணைத்திருப்பார். அயலவர்களுக்கு அவர் ஆற்றிய பணி அவர்களுக்குக் கற்பிப்பதும், அறிவுறுத்தல்களை வழங்குவதும், அவர்களோடு இணைந்து செபிப்பதுமாகும்.**

**இலங்கையின் திருத்தூதரான தூய யோசேப் வாஸ் முனிவரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!**

அருட்பணி. எஸ். ஆர். ஜெயரெட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயமத்தேயு நற்செய்தி ஆண்டில்

# "நற்செய்தியை அறிவோம்"

**சென்ற இதழின் தொடர்ச்சி**

இக்கால கட்டத்திலேதான் அண்ணளவாக தூய மத்தேயு நற்செய்தி எழுதப்பட்டிருக்க வேண்டும் என நற்செய்தி ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அத்தோடு இயேசுவின் சீடர்களும் யூதத் தொழுகைக் கூடங்களை விட்டு விட்டு, தூய ஆவியின் பெலத்தில் திருச்சபையாக கூடி வந்து வாழவும், இறைவார்த்தையை பறைசாற்றவும் தொடங்கினர். இவ்வாறான ஒரு சூழலில் தான் தூய மத்தேயு தோன்றியிருக்க அதிக வாய்ப்புக்கள் உண்டு.

கிறிஸ்துவுக்குப்பின் 70ம் ஆண்டளவில் உரோமையர்களால் யெருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டது. இங்கே நம் ஆண்டவர் சீடர்களுக்கு கூறிய வார்த்தைகளை நினைவு கூறலாம்!

"இங்கே கற்கள் ஒன்றின் மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும்" (மத் 24:2)

யெருசேலம் தேவாலயம் உரோமையர் அழிக்கப்பட்டது என்றால் அத்தோடு யூதர்களின் சகல விதமான அரசியல், சமூக, சமய செயற்பாடுகளாலும் முறியடிக்கப்பட்டன, அழிக்கப்பட்டன என்றே கூறலாம். ஆண்டு தோறும் சென்று வழிபட்டு வந்த அழகான ஆலயம் இனி இல்லை. யூதர்கள் எனும் தனி அடையாளத்தை தந்த யெருசலேம் மையம் இனி நமக்கில்லை

~ உறவை இழந்தோம்
~ உயிர்களையும் இழந்தோம்
~ உடமை இழந்தோம்
~ வீடுவாசல் இழந்தோம்
~ ஆலயம் இழந்தோம்

இறுதியாய் நமக்கிருந்த நம்பிக்கையையும் இழந்து உடைந்து போன நிலையில் தான் "யூதர்களையும், யூதக் கிறிஸ்தவர் நின்று கொண்டிருந்தார்கள். இந்தச் சூழலில் தான் தூய மத்தேயு நற்செய்தி தோன்றியிருக்கிறது.

முக்கியமாக தொடக்க காலத் திருச்சபையில் வாழ்ந்து வந்தவர்களுக்கு, அன்பு, மன்னிப்பு, நட்பு, நல்லுறவு இன்றியமையாதது எனக் கூற வேண்டிய கட்டாயம் இருந்தது. இயேசுவின் போதனைகளை ஏற்றுக் கொண்டோருக்கான வாழ்க்கை முறை இதுதான் என்பதை தூய மத்தேயு நற்செய்தியின் ஆழம் தெளிவுபடுத்துவதை இந் நற்செய்தியை படிப்பவர் அனைவரும் அறிய முடியும்.

குறிப்பாக யெருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டாலும், யூதர்களின் நெறிகளையும் போதனை-களையும் விட இயேசுவின் இறையரசின் மதிப்பீடுகள் உயர்ந்தவை எனவும் காட்ட விரும்புகிறார் நற்செய்தியின் ஆசிரியர்!

நமக்கும் இதில் ஓர் படிப்பினை உண்டு! யூதர்களைப் போலவேநாமும்

~ உயிர் இழந்தோம்
~ உறவுகள் இழந்தோம்
~ நிலபுலன்கள்,வீடுவாசல் இழந்தோம்

ஆனாலும் இறை நம்பிக்கை இழக்காமல் இறையரசின் மதிப்பீடுகளை வாழ்வோம்!!! நிச்சயம் ஒருநாள் நாம் உயர்வடைவோம்!!!

**அருட்பணி. போல் றொபின்சன்**

## குடும்ப அப்போஸ்தலத்துவம்



அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது….. என்னும் ஔவையாரின் கவிக்கு இசைவாக, இப்பிரபஞ்சத்தின் படைப்பிலே மனிதப்பிறவி என்பது, இறைவனால் கிடைக்கப் பெற்ற அரும் பெரும் கொடை எனக் கூறுதல் மிகப் பொருத்தமே. இறைவன் முதல் மனிதனை தம் உருவிலும் சாயலிலும் படைத்ததாகவும், தமது உயிர் மூச்சை ஊதி உயிருள்ளவனாக மாற்றியதையும் திருவிவிலியம் திறம்படக் கூறுகின்றது. இறைவனால் உருவாக்கப்பட்ட மனிதனது வாழ்க்கையின் வளர்ச்சிப் படிநிலைகளும் சாதாரணமான ஒரு ஏணியைப் போன்றதே.

இவ்வாறு தான் குடும்ப வாழ்வும், மெய்விவாகம் என்னும் திருவருட்சாதனத்தின் போது, தம்பதியர் இறைசந்நிதியில், தம் வாழ்நாளெல்லாம் மதிக்கவும், நேசிக்கவும் ஒருவருக்கொருவர் வாக்குறுதி கொடுக்கின்றார்கள். கொடுத்த வாக்குறுதியோடு, இல்லற வாழ்க்கையெனும் ஏணிப்படியில் கால் வைக்கின்றார்கள். இந்தப் பயணத்தில் முன்னோக்கி ஏற வேண்டிய கால்கள் பின்னோக்கி இறங்குகின்ற சில துர்ப்பாக்கிய நிலைகளும் ஏற்படத்தான் செய்கின்றன. இவ்வாறான வேளைகளில் சோர்ந்து போகாது, சீற்றம் கொள்ளாது, நின்று நிதானித்து கொடுத்த வாக்குறுதியை ஒருகணம் நினைவூட்டிக் கொள்ளும் போது, ஏணி என்ன ஏணி எவரெஸ்ட் மலையில் கூட ஏறுவதற்கான துணிவு உருவாகும். எனவே தான் குடும்ப வாழ்வை உறுதிப்படுத்த குடும்ப ஆன்மீக வளர்ச்சி அவசியமாகி விடுகிறது. குடும்பத்தின் மையமாக இறைவனை ஏற்று குடும்ப வாழ்வை திறம்பட அமைக்க திடசங்கற்பம் கொள்வோம்.

திருமதி.சிந்துஜா லெப்பன்
குடும்ப வாழ்வுப் பணியகம்

### இல்லற வாழ்வு இனிமை பெற......

1. மனவுறுதி ~ மெய்விவாக அருட்சாதனத்தினால் பிணைக்கப்பட்ட தம்பதியர் இருவரும் தமது குடும்ப வாழ்வில் இறைவன் எம்மோடு இருந்து வழிநடத்துவார் எனவே நாம் எம் வாழ்வை வெற்றிகரமாக வாழ்வோம் என்னும் மனவுறுதி கொள்ள வேண்டும்.

2. மனமுதிர்ச்சி ~ வெவ்வேறு குடும்பத்தில், வெவ்வேறு சூழல் பின்னணியில், இரு வேறு கலாசாரங்களைப் பின்பற்றிய தம்பதியர் ஒருவர் மற்றவரை குறைநிறைகளோடு ஏற்றுக் கொண்டு, அன்பு செய்து, புரிந்து கொண்டு குடும்ப வாழ்வு இறைவனின் அன்பின் அழைப்பு என்பதை ஏற்று வாழ இருவருக்கும் மனமுதிர்ச்சி அவசியமாகும்.

### கத்தோலிக்க திருமணம் ஓர் இறையழைத்தல்

✔ இறுதிவரை தம் மறைபணியை செய்ய வேண்டும்
~ மத்தேயு 19 : 6
✔ தனது துணையின் மீட்புக்காகவும் முழுமைக்காகவும் அர்ப்பணித்தல்
~ எபே 5 : 25, 32~33
✔ மனிதன் தன் தாய் தந்தையரை விட்டுவிட்டு ஒன்றாயிருப்பர்
~ தொட நூ 2 : 23 — 25




**அருட்பணி. ஜீட் ஜோன்சன்**

தொடரும்...




# தூய மத்தேயு ஆண்டு



## மலைப்பொழிவுகள்

✦ மத் 5. 6, 7 அதிகாரங்களில் இயேசுவின் மலைப்பொழிவை வாசிக்கிறோம்.
✦ "பேறுபெற்றோர்", பெறுபேறுகள் என பொருள்படும். மகிழ்ச்சியின் உயர்நிலையிது.
✦ உண்மை மகிழ்ச்சியின் திறவுகோலாகவும், உண்மைக் கிறிஸ்தவ வாழ்வைத் தருவதாகவும் இது அமைந்துள்ளது.
✦ உலகின் ஒளியாகவும் உப்பாகவும் இருக்கிறீர்கள் என்று இயேசு தன் சீடர்களுக்குக் கூறினார். சட்டத்தை கடைப்பித்து அதை கற்பிப்போர் விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவர் என்றார்.




**தெரிவுகள்:**
✦ இறைவழிகாட்டலில் சரியான தெரிவுகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.
✦ தெரிவு கடினமாகதாக இருக்கலாம். இடுக்கமான வாயில் வழியே நுழையுங்கள்.

***உலகப் போக்கில் எமது தெரிவுகள் அமையக்கூடாது (மத்7: 13–14)***

✦ 10 கட்டளைகளின் ஆன்மீகப் புரிதலே மலைப்பொழிவு. கொலை செய்பவர் மட்டுமல்ல சினம் கொள்பவரும் (5:22), விபசாரம் செய்பவர் மட்டுமல்ல இச்சையுடன் நோக்குவதே (5:28) தப்பு என்கிறார் இயேசு.

✦ மிகவும் கடினமான கட்டளைகள்: பகைவரிடமும் அன்புசெய் (5:44),விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள் (5:48).



✦ இயேசுவின் எச்சிக்கை: "என்னை நோக்கி, "ஆண்டவரே, ஆண்டவரே" எனச் சொல்பவரெல்லாம் ……"
உண்மைக் கிறிஸ்தவர், பெயரளவில் கிறிஸ்தவர் ~ இரண்டினதும் வித்தியாசம் பற்றிய தெளிவு வேண்டும்.
(மத் 7:21) போலி இறைவாக்கினர் பற்றிய தெளிவும் அவசியம் (7:20)
✦ இயேசுவின் மலைப்பொழிவு அன்று அவர்களுக்கு மட்டுமல்ல, இன்று எமக்கும் பல வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத்தருகின்றது.
✦ வார்த்தை அல்ல, வாழ்வு முக்கியம். எமது நம்பிக்கை கிறிஸ்தவ வாழ்வு பாறை மீது கட்டப்பட்ட வீடுபோல இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத் திருவிழா

எமது திருமலை மறைமாவட்டத்திலே பாலை மரங்கள் அடர்ந்த சோலை என்று அழைக்கபப்படும் பாலையூற்றில் பதி கொண்டு எமக்காக இறைதந்தையிடம் பரிந்துரைக்கும் எமது தூய லூர்து அன்னையின் திருவிழா சிறப்புத் திருப்பலியானது 2017.05.28 அன்று எமது மறைமாநில ஆயர் பேரருட்திரு நோயல் இம்மானுவேல் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் பல பங்குகளிலும், வேறு மறைமாவட்டங்களில் இருந்தும் அன்னையின் பக்தர்கள் அன்னையின் ஆசிபெற ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர். அவர்களுக்கு திருப்பலி நிறைவில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

மேலும் அன்று மாலை " றெகபேத்" என்ற கருப்பொருளில் (நாம் வளர்ச்சியடைகின்றோம்) எமது ஆயரின் தலைமையில் மாபெரும் கலைவிழாவும் நடைபெற்றது. இக்கலைவிழாவின்போது G.C.E. (O/L) பரீட்சையில் 7A சித்தியும் அதற்கு மேல் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஆயரினால் அன்பளிப்பு வழங்கப்பட்டதோடு, எமது உதவிப்பங்குத்தந்தை ஆரோக்கியசாமி (கப்புச்சின் துறவற சபை) இடமாற்றம் பெறவிருப்பதனால் அவருக்கான பிரியாவிடை வைபவமும் அனைத்து பக்தி சபை உறுப்பினரின் பிரசன்னத்துடன் நடைப்பெற்றது.

மேலும் கடந்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட செபமாலைப்பேரணி 27.05.2017 அன்று ஒவ்வொரு பங்குகளிலும் இருந்து ஆரம்பிக்கப்பட்டு இறுதியாக பாலையூற்றில் வந்தடைந்ததும் அருட்பணி யூட் ஜோன்சன் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அத்தோடு பாலைமரங்கள் அடர்ந்து காணப்பட்ட பாலையூற்றில் தற்போது பாலைமரங்கள் அருகிக்காணப்படுவதால் அவற்றை மீளவும் வளர்த்தெடுக்கும் நோக்கில் செபமாலைப்பவணி அன்று திருப்பலி நிறைவில் எமது ஆயர் தலைமையில் கெபியை அண்டிய பகுதிகளில் பாலைமரங்கள் நடப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது.

தகவல் : திருமதி.அ.சகாயம்
தூய லூர்து அன்னை திருத்தலம்,
பாலையூற்று.

புகைப்படம் 12ம் பக்கத்தில்......

### இளையோர் திறன் உயர........

### தேடலின் தெளிவு

"உலகில் இதுவரை எந்த ஒரு ஞானியாலும் வரையறை செய்ய முடியாத எல்லை கொண்ட ஒன்று உண்டு எனில் அது இளையோரின் உள்ளம் மட்டும் தான் " அறிஞர் மார்ஷியல் அவர்களுடைய இந்த வரிகளை வாசித்த போது பல நூறு கேள்விகள் வெகுண்டெழுந்து வந்ததென்னவோ மறுக்க இயலாத உண்மை தான்.

கீட்ஸ், பாரதி, பட்டுக்கோட்டை, அலெக்சாண்டர், பகத்சிங், மாஜினி. மாணிக்கவாசகர், இயேசு கிறிஸ்து...... என இளவயது சாதனையாளர்களின் பட்டியலை ' இந்தா ' எனக் தருகிறது இந்தப் பிரபஞ்சம். இளையோரின் வலிமையை இந்தப் பட்டியலைக்கண்டு, உணர்ந்து பெருமிதம் கொள்ளும்போதே காதல், அழகிப்போட்டி, ரசிகர்மன்றம்...... இப்படியாகச் சிதைந்து போகின்ற இளையோரைச் சுட்டுகிற செய்திகளும் தெறித்த விழுகின்றன.

எத்தனை சாதனைகள்! எத்தனை சறுக்கல்கள்!
எத்தனை வீழ்ச்சிகள்! எத்தனை எழுச்சிகள்!
எத்தனை சரிவுகள்! எத்தனை எழுச்சிகள்!

மக்கள் தொகை எண்ணிக்கையில் ஏறக்குறைய 27.56 சதவீதம் கொண்ட இளைஞர் நிற்கின்ற தளம்தான் இது. வயதுக்கு மீறிய அழுத்தம்! அழத்தத்தில் நசுங்கும் இதயம்! சரிகிறார்களா? நிமிர்கிறார்களா?

சமூகப்பொறுப்பு, உறவுப்பாலம், படைப்பாற்றல் உத்தி, தொடர்பியல் திறன் இவையெல்லாம் அடிமனதில் கொண்ட இளையோர், ஆணும் பெண்ணுமாகச் சமநிலையில் பயன்படுத்தும் போது சமூகம் உயரும்.

ஜூடோ கற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்திலே வாழ்ந்த அவன் விபத்தில் தன் இடக்கையை இழந்தான். ஆனாலும் அவனுக்குள்ளே இருந்த உள்ளுணர்வில் ஜூடோ கற்றத்தரும் குருவிடம் சென்று தன் வேட்கையைக் கூறினான். அவனுக்கு ஒரே ஒரு குத்து வித்தையை மட்டும் சொல்லிக்கொடுத்தார். தினமும் அந்தக் குத்துப் பயிற்சியை மட்டும் எடுத்த சிறுவன் இறுதியில் போட்டிக்கு வந்தான். யாரும் எதிர்பார்க்காதபடி முன்னேறி இறுதிப்போட்டியில் பதக்கம் வென்று திரும்பினான். குருவிடம் சென்று ஐயா என்னால் எப்படி வெல்ல முடிந்தது? ஆச்சியத்தடன் கேட்டான். குரு காரணம் இரண்டினைச் சொன்னார். ஒன்று இந்தக் குத்துதான் ஜூடோ கலையிலேயே மிகச் சக்தி வாய்ந்த குத்து. இன்னொன்று இதைச் சமாளிப்பவர் எதிராளியின் இடக்கையை மடக்க வேண்டும். உனக்கு இடக்கை இல்லை. 'பலவீனத்தை பலமாக்கு' என்ற இந்தக்கதை தேடலின் தெளிவைச் சுட்டுகின்றது. இளையோர் தம்மை அடக்கும் சக்தியை வென்று எழ வேண்டும். தம் பலவீனத்தை பலமாக்கிக் காட்ட வேண்டும்.

தொடரும்..............

1ம் பக்கத் தொடர்ச்சி....... குருத்துவ திருநிலைப்படுத்தல்

- 1990ம் ஆண்டு உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் நிமித்தம் இவர்களது குடும்பம் இந்தியாவிற்கு புலம் பெயர்ந்தனர்.
- இவர் தனது மேல்நிலைப் படிப்பை திண்டுக்கல்லில் உள்ள புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பயின்றார்.
- 1990ம் ஆண்டு உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் நிமித்தம் இவர்களது குடும்பம் இந்தியாவிற்கு புலம் பெயர்ந்தனர்.
- இவர் தனது மேல்நிலைப் படிப்பை திண்டுக்கல்லில் உள்ள புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பயின்றார்.
- தூய பிரான்சிஸ் அசிசியாரின் எளிமையான வாழ்வினால் கவரப்பட்ட இவர் கப்புச்சின் துறவற சபையில் 2006ம் ஆண்டு சேர்ந்து தூத்துக்குடியிலுள்ள தூய பியோ சிறிய குருமடத்தில் குருத்துவ படிப்பினை ஆரம்பித்தார்.
- நாகர்கோவிலில் உள்ள அசிசி ஆசிரமத்தில் தனது நவதுறவற வாழ்வை முடித்து 2009ம் ஆண்டு வைகாசி மாதம் 09ம் திகதி தன்னுடைய முதல் வார்த்தைப்பாட்டை கொடுத்தார். கோத்தகிரி பிறையரி, தூய வளனார் மெய்யியல் கல்லூரியில் தனது மெய்யியல் படிப்பை தொடர்ந்தார்.
- 2012,2013 ஆண்டுகளில் களப்பணி அனுபவத்தினை நாகர்கோவிலில் உள்ள அசிசி ஆசிரமத்தில் பெற்றார்.
- 2013ம் ஆண்டு பிரான்செஸ்கோ கப்புச்சின் இறையியல் கல்லூரியில் இறையியல் படிப்பை தொடர நுழைந்தார்.
- 2014ம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி தன்னுடைய இறுதி வார்த்தைப்பாட்டை திருமங்கலம் நிர்மலா ஆசிரமத்தில் அப்போதைய கப்புச்சின் மரியான் அமைதியின் மறைமாநில அதிபர் அருட்தந்தை ஆரோக்கியம் அவர்களது கைகளில் கொடுத்தார்.
- இவர் 2016ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி கும்பகோணம்மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய அந்தோனிசாமி ஆண்டகை அவர்களால் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- 2016ம் ஆண்டு மார்கழி மாதம் தனது இறையியல் படிப்பை வெற்றிகரமாக முடித்து திருத்தொண்டர் பணியினை இலங்கையிலுள்ள திருகோணமலை மறைமாவட்டம் மூதூர் என்னும் பங்கில் தொடர்ந்தார்.
- இறைவனின் பணிக்காக தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் பொருட்டு "ஆகட்டும்"லூக்கா 1:38என்கிற அன்னை மரியாளின் இறைவாக்கோடு தன்னுடைய குருத்துவ பணியினை துவங்கியிருக்கும் இவரை இறைவன் நிறைவாக தன்னுடைய ஆவியின் வல்லமையினை பொழிந்து ஆசீர்வதிப்பாராக.

# குடும்ப நற்பணிகள் ஆண்டு

- கடவுள் தொடக்கத்தில்ஆணையும் பெண்ணையும் படைத்துமிகவும் நன்றாய் இருந்ததைக் கண்டுமகிழ்ந்தார்.
- திருமணஒப்பந்தம் என்பதுதிருமணத்திற்கு முன்பாக வரக்கூடிய ஓர் ஒப்பந்தம். இதை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- திருமணம் என்பது இறைவனின் அழைப்புஎன்பதில் நம்பிக்கைகொள்ளவேண்டும்.
- திருமணம் செய்ய இருப்பவர்கள் ஆரம்பத்தில் தமதுஉணர்வுகளால் உந்தப்பட்டாலும் இது ஒருபயணம் என்பதை இவர்கள் உணரவேண்டும்.



- திருமணஒப்பந்தகாலத்தைஆணும் பெண்ணும் ஒருவரைஒருவர் அறியவும் புரிந்துகொள்ளவும் பயன்படுத்தவேண்டும்.
- இதில் "அன்பு" மையப்படுத்தப்பட வேண்டும். இது ஒரு தேடல், புரிதல், தமது பயணத்தின் ஆரம்பம்.
- திருமணம் இறைவனின் படைப்பு, அழகானது, நிரந்தரமானது. இதைப் புரிந்து இருவரும் தம்மை அர்ப்பணிக்கவேண்டும்.
- இருவரும் இணைந்து அன்பினால் உந்தப்பட்டு உழைக்க வேண்டும், பயணிக்க வேண்டும். இக்காலத்தில் இவர்களது திருமணம் தீட்டப்பட வேண்டும்.



திருமண ஒப்பந்தம்

- திருமணம் என்பது ஆணும் பெண்ணும் கருத்தொருமித்து உருவாக்குவது. இதை வாங்கவோ விற்கவோ முடியாது. ஏமாற்றவோ, காட்டிக் கொடுக்கவோ கைவிடவோ முடியாது.
- கணவன் மனைவிக்கிடையே இருக்கக் கூடிய ஆழமான அன்புறவை இறைவன் இஸ்ரயேல் இனத்தோடு ஏற்படுத்துகின்றார். எரேமியா, ஓசேயா நூல்கள் இதற்கு சான்று.
- ஓசேயா 2: 19 ~20 முடிவில்லாக்காலத்திலும், நேர்மையிலும் நீதியிலும், பேரன்பிலும், மாறாத அன்புடன் மண ஒப்பந்தம் செய்து கொள்வேன் என்கிறார் ஆண்டவர்.

- இறுதியில் இயேசுவும் திருஅவையும் மண ஒப்பந்தத்திற்கு அடையாளப்படுத்தப்படுகின்றன. இயேசுவில் இறைவன் திருஅவையை திருமணம் செய்கிறார்.
- திருமணமும் திருமண ஒப்பந்தமும் ஒன்றல்ல. திருமண ஒப்பந்தம் முதிர்ச்சி அடைந்த திருமண உறவிற்கு இட்டுச் செல்கிறது. திருமண ஒப்பந்தம் ஓர் பயணம். அன்பில் முதிர்ச்சியடைவது. திருமணம் ஹைம் நிலையை அடையும் வரை காய் கனிந்து வருவதைப் போன்றது.

**சூசையும் மரியாவும் திருமண ஒப்பந்தமாயிருந்தார்கள். திருமணத்திற்கும் இறையழைத்தலுக்கும் மரியாதை கொடுத்து ஒவ்வொரு தடைகளையும் தாண்டி வாழ்ந்து காட்டினார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி....

**31. கல்லேகடைகடு**

மன்னாருக்கு அண்மையில் தூய யோசப்வாஸ் அடிகளார் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இது, கோவா போ ஆவிஸ்டா மலையிலுள்ள திருச்சிலுவையின் பிரதிரூபமாக கருதப்படுகின்றது.

**32. பெரிய கரிசல்**

மன்னார் தீவிலுள்ள பேசாலை கிராமத்திற்கு அண்மையிலுள்ள பெரிய கரிசல் கிராமமானது ஒல்லாந்தர் காலத்தின் வட இந்தியாவுக்குச் செல்லும் பிரதான துறைமுகமாக இருந்தது. இவ்விடத்தில் தூய ஜோசேப்வாஸ் அடிகளாரால் நிர்மாணிக்கப்பட்ட திருச்சிலுவை ஒன்று காணப்படுகின்றது.

**33. அரிப்பு**

மன்னாருக்கு அண்மையில் தூய ஜோசேப் வாஸ் அடிகளார் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இத்திருச்சிலுவை, கோவை புதுமை புரியும் திருச்சிலுவையை ஒத்ததாகும்.

**34. கல்லிக்குளம்**

யாழ்ப்பாண மன்னார் மறைமாவட்டங்களின் எல்லையில் நிலைநிறுத்தப்பட்ட இத்திருச்சிலுவை ஜோசேப் வாஸ் அடிகளாரின் மறைத் தூதுப்பணிக்கு சான்று பகருகின்றது. துன்ப துயரங்களின் போதும் நோயுறும் போதும் இவ்விடத்தில் இன்றும் நேர்த்திகள் செய்யப்படுகின்றன

**35. வஞ்சியாக்குளம்**

தூயவர்களான பேதுரு பவுல் ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்ட வரலாற்று சிறப்பு மிக்க தேவாலயமான இது, ஒறத்தோரியன் சபைக்குருக்களின் பிரபல மத்திய நிலையமாகும். தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் காலத்திற்கு உரித்தான இத்திருச்சிலுவை, கோவா நகரின் புதுமை மிக்க திருச்சிலுவையின் பிரதிரூபமாகும்.

**36. செட்டிக்குளம்**

வனவிலங்குகள் மற்றும் பாம்பு போன்றவற்றின் தொல்லையிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள தூய ஜோசேப் வாஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட திருச்சிலுவை, இப்பிரதேசத்தில் இன்றும் ஒரு பாலை மரத்தின் பொந்து ஒன்றில் காணக்கூடியதாக உள்ளது.

**37. பல்லேகந்தலையிலுள்ள தூய அந்தோனியார் தேவாலயம்**

வில்பத்து மண்ணில் பாதுவா தூய அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாலயமானது, தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாலயத்திற்கு தூய ஜோசேப் வாஸ் அடிகளார் நான்கு முறை வருகை தந்திருந்ததாக அறியப்படுகின்றது. சிலாப மறைமாவட்டத்தின் பிரதான தேவாலயமாக இது கருதப்படுகின்றது.

~

# விவிலியத்தில் குடும்பம்

**" தாயையும் தந்தையையும் தவிக்கும்படி விட்டு விட்டுத் தனிக்குடித்தனம் அமைப்பதா? "**

விவிலியம் காட்டும் விதிமுறை !?




இன்று எத்தனையோ இளஞ்சிட்டுக்கள் தாமாய் தரணியெங்கும் பறந்து சென்று தமக்கென ஒரு தனிக்கூட்டை அமைத்துக்கொள்கின்றனர். வயது முதிர்ந்த அவர் தம் தாய் தந்தையரின் நிலையைப் பற்றிப் பெரிதும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. அவர்களின் அதிகப்படியான கரிசனையே தம் பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டதில் அடங்கிவிட்டதாக மனநிறைவு கொள்கின்றனர் ஒரு சிலர். வேறு சிலரோ, "இதனால், கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" (தொநூ 2:24) எனும் விவ யக் கூற்றைத் தமக்கு பக்கபலமாய் பயன்படுத்துகின்றனர். ஆனால், இக்கூற்றின் உண்மை பொருள் இதுதானா என்பதைச் சற்று ஆய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

இக்கூற்றை விவிலியத்தைப் புரட்டிச் சற்று கூர்ந்து பார்த்தாலே போதும். அதிலே ஒரு நெருடல் இருப்பதைக் கண்டுணர்வோம். ஆதி மனிதன் ஏவாளைப் பார்த்ததுமே "ஆஹா, என் எலும்பின் எலும்பே, என் தசையின் தசையே" என்று காதல் கவிதையைப் பாடி மகிழ்கின்றான். இந்தக்காட்சியை திருநூல் ஆசிரியர் பதித்ததுமே, அதன் தொடர்ச்சியாக, "இதனால்" எனும் இணை இடைச் சொல்லைப் புகுத்தி, அதன் பிறகு, இக்கூற்றைப் பதிவு செய்கின்றார். "கணவன் தன் தாய் தந்தையை விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்' இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" என்று ஆதி மனிதனையும், அவனிடமிருந்து உருவான மனைவியையும் பற்றிய காட்சியைத் திரு ஆசிரியர் விவரிக்கின்ற போது, வேறொரு கணவன் - மனைவியைப் பற்றியோ அவர்களின் தாய் - தந்தை பற்றியோ பேசுவதற்கு இங்கே பொருத்தமே இல்லை. எனினும் அவர் அதைப் பொருத்தியிருக்கிறார் என்றால் அதற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்திருக்க வேண்டும்.

திருநூல் ஆசிரியர் தமது சமுதாயத்தில் ஏற்கெனவே பழக்க வழக்கத்தில் நிலவி வந்த ஒழுங்குமுறை மனித சமுதாயத்திற்கே தேவையான அறநெறி விதி என இறை ஏவுதலால் கண்டுணர்ந்திருக்கிறார். எனவே, தமது காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த விதிமுறை மானுடம் முழுதும் கடைபிடிக்க வேண்டிய விதிமுறையாக்க வேண்டும் எனும் நோக்கத்தோடு அதை ஆதிப்பெற்றோரின் காதலிலிருந்து விளைந்ததாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய நியதி என ஈண்டு அறிவுறுத்துகிறார் என்பது தெளிவு.

# மத்தேயு நற்செய்தி: ஓர் அறிமுகம்



**இயேசுவின் முன்னோடி மோசே**

இயேசுவைப் புதிய மோசேயாக மத்தேயு இன்னொரு கோணத்தில் காணுகின்றார். இயேசுவின் உருமாற்றத்தைப் பற்றிச் சொல்லுகையில் (மத் 17: 1-9) இயேசுவோடு மோசேயும் எலியாவும் உரையாடியதாகக் காட்டுகின்றார். பழைய ஏற்பாட்டில் சட்டங்களுக்கு மோசேயும் இறைவாக்குகளுக்கு எலியாவும் எடுத்துக்காட்டாக நின்றனர். தபோர் மலையில் இயேசுவோடு தோன்றிய மோசே சீனாய் மலையில் கடவுளைக் கண்டார். (விப 3: 1- 6) கடவுளின் மலையாகிய ஒரேபு மலையில் எலியா கடவுளின் காட்சியைக் கண்டார். (1அர 19:8 – கார்மேல் மலை). மூன்றாம் மலையாகிய தபோர் மலையில் இயேசுவாகிய கடவுளின் உடனிருப்பில் காட்சி அளிக்கின்றனர். இணைச்சட்டம் 34:6 ஐ பின்னனியாகக் கொண்ட ராபி மரபு (சுயடிடிலைௌஉ வுசயனவைழைெ) மோசே இறப்பின்றி விண்ணிற்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்று கூறுகின்றது.

திருவெளிப்பாடும் இவ்விருவரைப்பற்றி அவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் செயற்பாடுகளைக் குறிக்கின்றது. வானத்தை அடைத்து பஞ்சம் உண்டாக்கிய எலியாவையும் எகிப்தின் நீரை இரத்தமாக மாற்ற வல்லமை பெற்ற மோசேயையும் குறிப்பிடுகின்றது. (திவெ 11: 5-6) இவற்றின் அடிப்படையில் இவ்விரு இறைவாக்கினர்களும் மீண்டும் வருவர் என நம்பினர். வரவேண்டிய எலியா வேறுயாருமல்ல திருமுழுக்கு யோவான் தான் என்று இயேசு கூறுகின்றார் (மத் 11:14). இயேசுவே புதிய மோசேயாகவும் மெசியாவாகவும் வந்துள்ளார்.

காட்சிக்குப்பின் இயேசு தம் மூன்று சீடர்களிடம் இந்நிகழ்ச்சியைப் பற்றி தம் இறப்பு, உயிர்ப்பு வரை யாரிடமும் வெளியிடக் கூடாது எனக் கூறினார் (மத் 17:9) இதையே லூக்கா இன்னும் உயிரோட்டத்தோடு கூறுகையில் காட்சியின் போதே மோசேயும் எலியாவும் இயேசுவின் பாடுகள், இறப்பைப் பற்றி இயேசுவோடு பேசிக்கொண்டிருந்தனர் என்று எழுதுகின்றார் (லூக் 9 : 31)

**இயேசு இறைவாக்குகளின் நிறைவு**

மத்தேயு பழைய ஏற்பாட்டிலிருந்து அறுபதுக்கும் மேலான குறிப்புக்களை மேற்கோள் காட்டியுள்ளார். இது மற்ற நற்செய்தியாளர்களைக் காட்டிலும் இருமடங்காகும். இறையரசின் நற்செய்தியானது, பழைய ஏற்பாட்டின் நிறைவே என்பது மத்தேயுவின் இறையியல் கண்ணோட்டம். இந்த மேற்கோள்களை மத்தேயு தான் எழுதிய நற்செய்திக்கு இசைவாகப் பொருந்தும் வகையில் பயன்படுத்தியுள்ளார். "நிறைவுபெற" என்ற வினைச்சொல் அடங்கிய பத்து மேற்கோள்களைக் கூறுகின்றார்.

தொடரும்.........

இதனை நம் ஆண்டவர் இயேசுவே மேற்கோள் காட்டி, மணமுறிவுக்கு எதிராகக் கற்பிப்பதை நாம் புதிய ஏற்பாட்டிலே பார்க்கிறோம். மணமுறிவுப் பற்றி பரிசேயர் இயேசுவிடம் வினா தொடுத்த போது " படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்;" என்று நீங்கள் வாசித்ததில்லையா ?" என்று குருகுல மரபின் போதனையிலிருந்து மேற்கோள் காட்டுகிறார் (மத் 19:4). அது மட்டும் அல்லாது, இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டு விட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" என யாவே மரபின் கூற்றைக் கூறிவிட்டு, "இனி அவர்கள் இருவர் அல்ல ! ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மத் 19 :5-6) என அறிவுறுத்துகிறார். மேலும், தூய பவுல் திருத்தூதரும் இதே மேற்கோளைச் சுட்டிக்காட்டி பரத்தமையை விட்டு விலகி வாழ்வதன் தேவையை வலியுறுத்துகிறார் (1கொரி 7: 10) எனின், ஆதித்திருஅவையும் மேற்சொன்ன விவிலியக் கூற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பது உறுதி.

இந்த அளவுக்கு முக்கியமானதும் முதன்மையானதுமான ஒழுக்கமுறையை திருநூல் ஆசிரியர் ஆதிப் பெற்றோரது திருமணத்திலிருந்தே வரவழைத்ததன் நட்பங்களைச் சிந்தித்து பார்த்தால், திருமணம் பற்றிய மூன்று முக்கிய கூறுகள் துலங்குகின்றன. (1) ஆண் - பெண் எனும் இருவரின் உறவே திருமணம். (2) அவர்களின் ஆன்மீக உறவே உடலுறவுக்கு அர்த்தம் தருவது. (3) இந்தத் திருமண ஒன்றிப்பு மூலொரு இறை மறைபொருளை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. இவற்றை இனி விளக்கமாக பார்ப்போம்.

**1. ஆண் - பெண் எனும் இருவர் ஒன்றிப்பே திருமண உறவு**

" ஆண்டவராகிய கடவுள் ஆதி மனிதனை நிலத்தின் மண்ணால் உருவாக்கி அவ்வுருவத்தின் நாசிகளில் தமது உயிர் மூச்சை ஊதவே மனிதன் உயிருள்ளவன் ஆனான்" (தொநூ 2:7) என யாவே மரபாசியர் குறிப்பிடுகின்றார். கடவுளை குயவன் போல கருதி, நிலத்து மண்ணிலிருந்து பல பாத்திர பண்டங்களைச் செய்வதற்கு எத்துணை அக்கறை தேவைப்படுமோ அத்துணை அக்கறையோடு மானுட உருவைச் செய்ததாகவும், பிறகு அந்த உருவில் தனது உயிர் மூச்சையே ஊதியதால் தான் அவ்வுருவத்திற்கு உயிர் வந்தது என்றும் திரு ஆசிரியர் விளக்குகிறார். அதாவது கடவுளின் உயிரில் பங்கு பெறுபவனாகிறான் மனிதன். ஒரு பக்கத்தில் பார்த்தால் மனிதன் நிலத்தோடும் அதன் மண்ணோடும் தொடர்பு உள்ளவனாகத் தெரிகிறான். ஆனால் அவனது உயிர் கடவுளின் உயிரிலே பங்கு பெறுவதில் தான் அவனது மாண்பு அடங்கியிருக்கிறது என்பதும் மற்றொரு கோணத்திலிருந்து வலியுறுத்தப்படுகிறது.

மாண்பார்ந்த இந்த மனிதனை அழகு நிறைந்த ஏதேன் தோட்டத்திலே வைக்கிறார் கடவுள். இது வேலி அமைக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட தோட்டம். சுவை மிகுந்த எல்லா வகை மரங்களும் இருந்தன. வளமையும் செழுமையும் கூட்ட, ஆறுகள் பல பாய்ந்தோடிக் கொண்டே இருந்தன. இத்துணை சிறப்புகள் மிகுந்த தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் அம்மனிதனை அங்கு குடியிருக்கச் செய்ததாகத் (தொநூ 2 : 15) திருஆசிரியர் குறிப்பிட்டிருப்பதும் நம் கவனத்தை ஈர்க்கின்ற செய்தி !

ஆயினும் அவனுக்கு மகிழ்ச்சி இல்லை. "தனிமை" அவனை வாட்டியதைக் கண்ணுற்று, "தகுந்ததோர் துணையை உருவாக்குவேன்" என்கிறார் ஆண்டவர் (இங்கும் இறைவன் தானாய் பேசிக் கொள்வது போல காட்டப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது எந்தப் படைப்பாளரும் இப்படிச் செய்தால் மிகுந்த சிறப்புடைய படைப்பை படைக்கப்போகிறார் என்பதை ஏற்கெனவே விளக்கியுள்ளோம்). இதற்கு அதே மண்ணலிருந்து இறைவன் இன்னும் எத்தனையோ உருவங்களை உருவாக்கி உயிர் கொடுத்துத் தோட்டத்திலே குடிகொள்ளச் செய்திருக்கலாமே ! அதைச் செய்யவில்லை. மாறாக, அவனது விலா எலும்பிலிருந்து, அவனுக்கு எதிர்மாறான "பெண்" எனும் வேறொரு ஆளை உருவாக்கி அவன் முன் நிறுத்துகிறார். இதற்குச் சற்று முன்னதாக அந்தத் தோட்டத்திலிருந்த அனைத்து விலங்கினங்களையும் அவனுக்கு முன் அணிவகுப்பு நடத்திக் காட்டி, அவனையே அனைத்திற்கும் பெயரிடும் அதிகாரத்தை வழங்கிய போதும் அவன் தன் தனிமையை நீக்க முடியாது தவித்தவன், இப்போது ஏவாளைக் கண்டதுமே, அவனது தனிமை தானாய் பறந்தோடிவிட்டது.

ஏனெனில் தன் எலும்பிலிருந்து எழுந்தவள் அவள். தன் தசையால் ஆனவள் அவள். ஆயினும் எதிர்மாறான பண்புகளையும் பயன்களையும் பெற்றவள். எனவே ஒருவரை ஒருவர் நிறைவாக்கம் செய்பவர்களாகத் திகழ்பவர்களாக இனி அவர்கள் விளங்குவார்கள்.

தொடரும் ................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமை புரியும் பதுவைப் புனிதரின் இளமையில் புதுமை இரண்டு




நற்கருணையில் எழுந்தருளி உள்ள இயேசுவின் மீது கற்பனைக்கெட்டாத பற்று அந்தோனியாருக்கு உண்டு. அற்புதம் ஒன்றை அவர் வாழ்வில் முதலில் நற்கருணையின் முன்புதான் கண்டார். ஒரு நாள் கொற்றவர் இயேசு கொலுவீற்றிருக்கும் நற்கருணையைச் சொற்கடந்த அன்புடன் வழிபட்டுக் கொண்டிருந்தார். அற்பனான பேய்க்கு இதைப் பொறுக்க முடியவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு பூத வடிவத்துடன் முற்பட்டது அவரின் இறைவேண்டுதலுக்கு முடிவுகட்ட.

அன்பரின் கண்களிலிருந்து நற்கருணையை மறைந்து நின்று "அடேய் எழுந்துபோ" என்று அலறியது. முதலில் வழிபாட்டை நிறுத்து இல்லையேல் உன் மூச்சை நிறுத்துவேன் என்று எச்சரித்தது. அச்சம் சிறிது தோன்றியது. அந்தோனியாருக்கு ஆயினும் அவர் வேண்டுதலை நிறுத்தவில்லை. பேய் எதற்கு அச்சம் என்று அந்தத் தூயவர் அறிந்திருந்தார்.
தமக்கும் பேய்க்கும் நடுவே தம் பெருவிரலால் கோயிலின் சலவைக்கல்லின் மீது இயேசுவின் திருச்சிலுவை அடையாளத்தைவரைந்தார். மாசற்றவரின் சிலுவையைக் கண்டுமறைந்ததுபேய்.

உளி கொண்டு சலவைக் கல்லின் செதுக்கியது போல் தெளிவாகச் சிலுவை அடையாளம் பதிந்துவிட்டது. இன்றளவும் அந்தகோயிலிலே பள்ளமாகி மின்னுகிறது. அச்சிலுவையின் அடையாளம்......



பின்பு ஒருநாள் தோட்ட வேலையில் கண்ணும் கருத்துமாக அந்தோனியார் ஈடுபட்டிருந்தார். அத்தோட்டத்தின் அருகிலே ஒரு கோயில் அங்கே அப்போது திருப்பலி நிறைவேறிக்கொண்டிருந்தது. தங்குதடையற்ற வேலையின் நடுவிலும் தங்கமானவரின் உள்ளம் திருப்பலியிலே நிலைத்திருந்தது. எழுந்தேற்ற நேரம் வந்தது. வேலையை நிறுத்தி முழந்தாள்படியிட்டார் தரையில். பீடமிருந்த திசையை நோக்கினார். கோயிலின் சுவர் முரட்டுத் திரைபோல் நற்கருணையை மறைத்தது.
"திருமுகம் காணவேண்டும் பெருமானே" என்று உருகி உருகி அந்தோனியார் வேண்டினார். பெருமகன் இயேசுவின் உள்ளம் இரங்கியது அருகில் இருந்த அந்தோனியார் காணும்படியாகப் பெருசுவர் சிறிது விலகுமாறு செய்தார்.
அருமையான எழுந்தேற்றத்தை அடியவர் கண்டார். கரும்பும் கனிச்சாறும் தோற்கும் படியான பெரும் பேறான இன்பம் அவரின் நெஞ்சத்தில் அருவி போல் பெருகி ஓடியது.



" தூய அந்தோனியாரே கன்னெஞ்சரான பாவிகள் மனந்திரும்ப ஆண்டவரைமன்றாடும் "

1ம் பக்கத் தொடர்ச்சி..... இந்தியா பெங்களூர்.......
திருகோணமலை மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்தந்தை ஏ.றொகாண் பேணாட் அடிகளாரின் ஒருங்கிணைப்பிலும் பின்வரும் 04 பேர் பயிற்சி பெற்று திரும்பியுள்ளனர்.

1.திரு.கே.கிறிஸ்டி முருகுப்பிள்ளை ~ அலையோசை கலைத்தொடர்பகம்
2.திரு.ஏ.ஏ. பாக்கியநாதன் குரூஸ் ~ செல்வநாயகபுரப் பங்கு
3.செல்வி.ஹ.ஜெயமணி ~ சாம்பல்தீவுப் பங்கு
4. செல்வி.அ.அன் றொஸ்ரீனா ~ பேராலயப்பங்கு

தகவல் : திரு.கே.கிறிஸ்டி முருகுப்பிள்ளை

## உவர்மலை கோணேசபுரத்தில் ஜூபிலியைக் கொண்டாடும் தூய அந்தோனியார் பாலர் பாடசாலை

தூய அந்தோனியார் பாலர் பாடசாலை 1992ம் ஆண்டு உவர்மலை கோணேசபுரத்தில் எலன் பெற்றீசியா அவர்கள் ஆரம்பிக்கவிருந்தார். இவர்களது நிலையைக் கருத்திற் கொண்டு காலஞ் சென்ற அன்டனி ஆண்டகை அவர்கள் பாலர் பாடசாலைக்கு தனது ஆரம்ப நிதியினை வழங்கி ஆரம்பித்து வைத்தார். அவரது பெயரும், புனித அந்தோனியாரது பெயரும் அடங்கலாக தூய அந்தோனியார் பாலர் பாடசாலை எனப் பெயரிட்டு ஆரம்பித்த இப் பாடசாலை சிறந்த பொழிவு பெற்று மாவட்டத்தில் சிறந்த தரமான பாலர் பாடசாலைகளில் ஒன்றாக நற்பெருமைப் பெற்று விளங்குகிறது. வருடா வருடம் பாடசாலைக்குச் சேர்க்கும் மாணவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும் பாடசாலை மட்டத்திற்குச் சமமாக கல்வியினைப் புகட்டி நல் வழியினைக் காட்டிய பெருமை இப்பாடசாலைக்குரியது. நல்ல ஆசிரியைகளைக் கொண்டு பிள்ளைகளை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் (செல்விஆசிரியை) எலன் பெற்றீசியா குடும்பத்தை மறக்க இயலாது. அன்டனி ஆண்டகையினது நல் ஆசீரும் தூய அந்தோனியாரது ஆசீர்வாதமும் நிறைந்து மேலும் வளர்ச்சிப் பாதையிலும் பல்லாண்டுகள் கல்விப் பாதையிலும் சேவை புரிந்து ஜூபிலி ஆண்டில் காலடிவைக்கும் இப் பாடசாலை, பல்லாண்டுகள் கல்வி சேவையினைப் புரிய எமது நல்லாசிகளை தெரிவிக்கும்.

திரு.அன்டனிப்பிள்ளை . அ.இ.ச.நீ ~
புகைப்படம் 12ம் பக்கத்தில்............

## உவர்மலை குழந்தை இயேசு ஆலய தூய வின்சன் டீ பவுல் புதிய நிர்வாக சபை தெரிவு

உவர்மலை குழந்தை இயேசு ஆலயத்தின் புனித வின்சன் டி பவுல் சபையானது ஆலயப்பணிக்காகவும் வளர்ச்சிக்காகவும் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வெற்றியடைந்ததுடன் புதிய புதிய செயற்திட்டங்களையும் அமுல்படுத்தி அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் 15 பேர் கொண்ட இச்சபையின் இந்த வருடத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு கடந்தசித்திரைமாதம் 2ம் திகதி திரு இயேசுதாசன் பெர்னாண்டோ தலைமையில் எமது பங்குத்தந்தை அருட்தந்தை செ. சுகுனேந்திரன் குரூஸ் பிரசன்னத்தில் பிராந்திய சபை பொருளாளர் அருள்தாஸ் செயலாளர் லொறற்றா குரூஸ் மற்றும் ஏனைய உறுப்பினர்களுடனும் இணைந்து நடாத்தப்பட்டது புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக

1.தலைவர் - திரு.இ.அன்ரு கோல்சின்
2செயலாளர் - திருமதி.மேரி இரெட்ணசோதி
3. பொருளாளர் - திரு. பொனி செபஸ்தியான்
4.உப தலைவர் - திருமதி. சரோஜினி சிறில் பத்திநாதன்
5.உப செயலாளர் - திரு. ஏ. ஜெய சோதிநாதன்

ஆகிய இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் கடந்த சித்திரை 8ம் திகதி பாஸ்கா கால யாத்திரையாக 41 பேர் இணைந்து மாந்தை போன்ற திருத்தலங்களை தரிசித்து சிலுவைப்பாதை பூஜை வழிபாடு என்பவற்றை நடாத்தி எம் திருச்சபைக்காக வேண்டியதோடு உறவையும் பலப்படுத்திக் கொண்டார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது அந்த வகையில் இவர்களின் சேவை சிறக்க நாம் வாழ்த்தி நிற்பதோடு இவர்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு கரம் கொடுத்து உதவ அன்போடு அழைக்கின்றோம்.

தகவல் : செயலாளர்,
தூய வின்சன் டீ பவுல் சபை,
குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை.

## திருமுழுக்கு திருநிலையானது

மும்மொழிந்தனர் ஞானப்பெற்றோர்
முன்னெறி தெய்வம் வழிமொழிந்தனர்
திருமுழுக்கு யோவானின்
திருக்கரம் திறவுகோலானது
விண்ணகமம் திறபட
விடை கொடுத்தார் பரமபிதா!
இவரே என் பிரியமான மகன்
இவர் பெரில் பூரிப்படைகின்றேன்.

தச்சன் சூசையின் மகனுக்க மட்டுமல்ல
தம் சாயலான மனித குலத்துக்கே
புகை மண்டலமானது இல்லிடங்கள்
புலம்பெயர்ந்தனர் தொண்ணூறில்
இந்தியா திண்டுக்கல் மாவட்டமதில்
ஈழத்தமிழர் குடியில் வாழ்ந்தனர்
குபேரன் பாக்கியவானல்ல
குசேலர் பாக்கியவான் தான்

நவக்கிரகமாயின சகோதரர்கள்
நாட்டுக்கு ஒளிவீசியது எட்டாங்கால்பிள்ளை
கப்புச்சின் குருக்கள் சபையில்
காலூண்டி பதினொரு ஆண்டை முடிக்கையில்
பழமையூராம் மூதூரிலே!
பாக்கியுள்ளது பணியென்று
இலங்கைத்தீவுக்கு இவரை
இராப்போசனத்துக்குப் பின் அனுப்பி வைத்தனர்



முகவரி தெரிய முகமாய்
முன் பணியாளனாய்
முனியோன் புனித அந்தோனியில்லமதில்
மூவேளையும் தூபமது காட்டித் துதிக்கையில்
விடத்தல்தீவு மன்னார் மறைமாநிலமதில்
விழைந்தது நூறு மடங்காய்
அறிவித்தலில் ஒன்று ஆறு பதினேளில்
அடியானுக்கு அபிஷேக விழாவென்று

ஆசீர்வாதம் ஜேம்ஸ்சுக்கும்
அந்தோனிப்பிள்ளை மேரிக்கும்
மகனாம் ஜேம்ஸ் குயின்ரஸ்சுக்கு
மன்னார் புனித செபஸ்தியார் ஆலயமதில்
மதுரை மறைமாநில அதிபராம்
மதிப்பிற்குரிய அருட்தந்தை ஜான்
அருமைநாதன் பலி ஒப்புக் கொடுக்க
மரியாள் அமைதியின் அரசியாம்
மறைமாநிலத் தந்தையாம் ஆயர்
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
ஆண்டகையால் திருமுழுக்குத் திருநிலையானது
அகமகிழுதே மன்னவரும் விண்ணவரும்!

அ.குமார் கொறேயிரா
கொட்டியாரத்தான்
3ம் வட்டாரம்,
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாத உறவுகள்

*சரியான கவிதை வரிகள்*

இதயங்கள் ஒன்றாக இணையவே
இருவரல்ல ஒருவரெனக் காட்ட வேண்டும்
கடவுள் இணைத்து வைத்த உறவு அது
மனிதரால் பிரிபடவே கூடாது
என்னதான் வாழ்விலே நேரிட்டாலும்
இறைவன் இணைத்து வைத்த உறவு அதை
நிறைந்த மகிழ்வோடு தொடர்ந்து செல்ல
இறைவனையே துணைபுரிய வேண்டுவோமே

பங்குபற்றியவர்கள் ~ 13 பேர்
சரியாக வடிவமைத்தவர்கள் ~ 05 பேர்

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 400/- ரூபா
நி.தருணிக்ஷா
இல : 992, பிள்ளையார் வீதி,
செல்வநாயகபுரம்

2ம் பரிசு 300/- ரூபா
வர்ஷியா மைக்கல கொலின்
இல : 78, திருமாள் வீதி
திருகோணமலை

3ம் பரிசு 200/- ரூபா
ரா.குகலக்ஷிகா
இல : 1218, பாலையூற்று
திருகோணமலை

பாராட்டுக்குரியவர்கள்
1. திருமதி.பி.பெர்ணாண்டோ - மன்னார்
2. செல்வன்.ஏ.சுலக்ஷன்- பாலையூற்று

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

கலந்து கொண்டோர் :- 22 சிறுவர்கள்

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
தே.சமில்டன்
3ம் வட்டாரம்,
நிலாவெளி

2ம் பரிசு 300/- ரூபா
நி.கேஷாலினி
இல:992,பிள்ளையார்
கோவில் வீதி,
செல்வநாயகபுரம

3ம் பரிசு 200/- ரூபா
மா.தியானா
பற்றிமா வீதி,
திருகோணமலை

## விவிலிய வார்த்தைகளைக் கண்டுபிடித்தல் போட்டி

கலந்து கொண்டோர் :- 21 பேர்
மிகச்சரியாக விடையளித்தோர் :- 05 பேர்

### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
வேஜின் டி குரூஸ்
36A, காந்திநகர்,
அன்புவழிபுரம்.

2ம் பரிசு 300/- ரூபா
மா.தியானா
பற்றிமா வீதி,
திருகோணமலை

3ம் பரிசு 200/- ரூபா
ஆர்.எப்.பியூலா
21/3, வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

பாராட்டுக்குரியவர்கள்
1.ஆன்வஜிரா.ஆர்.எப்- பேராலயம்
2. சரோனா ஆர்.எப் - பேராலயம்

**பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும்**

கடலில் பயணம் செய்யும் போது, புயலால் கவிழவிருக்கும் படகைக் காப்பது அதில் பயணம் செய்யும் மனிதர்களின் தரமோ அல்லது வீரமோ அல்ல, மாறாக நம்மை இருளிலும் சிரமங்கள் மத்தியிலும் நடக்க வைக்கும் விசுவாசமேயாகும்

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி– 24

## 1 கொரிந்தியர் அதி 05 – 09 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நா | ■ | வி | | | | | | ■ | |
| | தி | ■ | க | | | | | ■ | |
| | | ம | ■ | வெ | | | ■ | | |
| | | | | ■ | | | ப | | |
| | | | | ம | | | | | |
| | | | ப | | | | ச | | |
| | | | ■ | ஏ | | | | | |
| | | ■ | அ | | | | | உ | |
| | | ■ | | | | | த | ■ | ஆ |
| ■ | | வி | | | | | | | |

01. ஆண்ட.....ரின் நாளில்
02. உறு....புகள்
03. விலைகொடு....து
04. மறும.......ம்
05. விரு.....தசேதனம்
06. நாம் உ....ணும் உ.......வு
07. தன்.....ரிமை
08. திராட்.......த் தோ.....ட......
09. கட்........யம்
10. பரி.....
11. வெ......றி
12. சகோ......ரி
13. ஹமா.....து
14. அருள்கொ.....
15. ப......கு
16. மண....ன

பெயர்:.........................................................
முகவரி:.........................................................
பங்கு:.........................................................

முடிவுத்திகதி : 25.07.2017

# மறைக்கல்வி கற்போம்

01. தூய யோசப்வாஸ் எத்தனையாம் ஆண்டு யாருடன் 4லி வேடம் தரித்து மன்னார் கரையில் இறங்கினார்?
**கி.பி. 1687 மே மாதம் ஜோன் என்னும் இளைஞருடன்**

02. கி.பி. 1687ம் ஆண்டு யூன் மாதம் தூய யோசேப் வாஸ் எங்கு சென்றார்?
**யாழ்ப்பாணம் ~ சில்லாலை**

03. தூய யோசப்வாஸ் காட்டிய வெளியடையாளங்கள்?
**கழுத்தில் பெரிய செபமாலை**
**கத்தோலிக்கர் மட்டும் புரிந்து கொள்ளும் வகையில் சிலுவையடையாளம் வரைதல்**

04. கண்டியில் (1697) கொள்ளை நோய் பரவிய காலத்தில் தூய யோசப் வாசுடன் பணியாற்றியவர் யார்?
**அருட்பணி ஜோசப் கார்வால்கோ**

05. இலங்கையில் மரணமடைந்த ஒறத்தோரியன் சபை குரு யார்?
**அருட்பணி ஜோசப் கார்வால்கோ**

06. இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுத்தவர் யார்?
**திருமுழுக்கு யோவான்**

07. வானம் திறந்ததையும் கடவுளின் ஆவி, புறா வடிவில் இறங்குவது போல தம்மீது வருவதையும் இயேசு எப்போது கண்டார்?
**திருமுழுக்கு பெற்று தண்ணீரை விட்டு வெளியேறிய போது**

08. இயேசுவை தூய ஆவி ஏன் பாலை நிலத்துக்கு அழைத்துச் சென்றார்?
**அலகையினால் சோதிக்கப்படுவதற்காக**

09. இயேசு எத்தனை நாள் நோன்பிருந்தார்?
**40 நாள் இரவும் பகலும்**

10. இயேசுவை சோதித்த அலகைக்கு மனிதன் எதனால் வாழ்வடைவான் என மறைநூலில் எழுதியுள்ளது என கூறினார்?
**கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும்**



கணவனும் மனைவியுமாக, பெற்றோரும் பிள்ளைகளுமாக, மாலை நேரங்களில், சிறப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில் விவிலியத்தை வாசித்தும், அன்னை மரியாளோடு ஒன்றாக இணைந்தும் செபமாலை செபிக்க வேண்டும்.

- திருத்தந்தை பிரான்சிஸ்

## ஹாய் குட்டீஸ்

திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 31
2அரசர்கள் 13 ~ 25 அதிகாரங்கள்

01. சமாரியாவில் ஒரு மாதமே ஆட்சி செய்த அரசன் யார்?
விடை :.............................

02. யூத மக்கள் எந்த நாட்டினின்று கடத்தப்பட்டார்கள்?
விடை :.............................

03.ஐம்பத்தைந்து ஆண்டுகள் எருசலேமில் ஆட்சி செய்த அரசன் யார்?
விடை :.............................

04. அசீரியா மன்னன் சல்மனேசர் யாருக்கு எதிராக வந்து முற்றுகையிட்டான்?
விடை :.............................

05.கோவிலில் கிடைத்த பணத்தை எண்ணிப் பைகளில் கட்டி வைத்தது யார்?
விடை :.............................

06. இஸ்ரயேல் மக்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு எதிராக தகாதவற்றை எப்படி செய்தனர்?
விடை :.............................

07. இஸ்ரயேல் மக்கள் எங்கு குடி இருந்தனர்?
விடை :.............................

08. துன்பமும், அவமானமும், கண்டனமும் மிக்க நாள் என்று யார் கூறுவது?
விடை :.............................

09. பெற்றோரின் பாவத்திற்காக யார் கொல்லப்படலாகாது?
விடை :.............................


10. அரசன் ஆகாசு கட்டளையிட்டபடியே அனைத்தையும் செய்தது யார்?
விடை :.............................

பெயர்:.........................................................
முகவரி:.........................................................
பங்கு:.........................................................

முடிவுத் திகதி 25.07.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்டத்தில் செபமாலைப் பேரணி



திருகோணமலை மறைமாவட்டத்தில் கடந்த 27.05.2017 அன்று செபமாலைப்பேரணி நடைபெற்றது. இப் பேரணியானது பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தை நோக்கிச் சென்று திருப்பலியுடன் நிறைவுற்றது. இப்பேரணியில் எமது மறைமாவட்ட ஆயர் அதிவந். கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும் கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இப்பேரணியில் பெருந்திரளான இறைமக்கள் கலந்து கொண்டார்கள். பேராலயம், குவாடலூபே, உவர்மலை, செல்வநாயகபுரம், அலஸ்தோட்டம் ஆகிய பங்குகள் இப்பேரணியில் கலந்து கொண்டன.

## திருமண வாழ்வில் வேது அகவை



திரு. திருமதி
அல்பிரட் தேவமணி சிசிலியம்மா
(திருகோணமலை, சாம்பல்தீவு)

1951.06.06 – 2017.06.06

கடந்து வந்த பாதையும்
கடக்க போகும் பாதையும் அவருடையதே
பல துன்ப துயரங்கள் வாட்டிய போதும்
இறைவனை சிக்கென பிடித்து
வாழ்வில் வளம் பெற்று
தமக்கென்று கிடைத்த வாழ்வின்
இலக்கிணை சம நோக்குடனும்
புரிந்துணர்வோடும் ஓடிக் கொண்டிருக்கும்
பெற்றோரே! உங்களை வாழத்துகின்றோம்.
அம்மை அப்பா உலகிலே கறையற்ற
அன்பும் உயர்ந்த காவியமும்
உங்களில் காண்கின்றோம்

பெற்ற செல்வங்கள் பலவாகினும்
சிறந்த செல்வம் குழந்தைகளே
அதிலும் ஆண்டவனுக்கே
முதல் கனியை காணிக்கையாய் அர்ப்பணித்தீர்கள்
நினைத்துப் பார்த்து வாழ்த்துகின்றோம்
பெற்றோரே நீங்கள் என்றும்
நற்சுகத்துடனும் மனமகிழ்வுடனும்
வாழ வளர வாழ்த்துக்களும்
செபங்களும் உங்களுக்கு......

இறையாசீர் வேண்டி வாழ்த்துகிறோம்
திருமலைத்தீபம் ஆசிரியர்களும்
பணியாளர்களும், திருகோணமலை மறைமாவட்டமும்

## 2016 தேசிய ரீதியிலான விவிலியப் போட்டியின் பரிசளிப்பு விழா



2016ம் ஆண்டு நடைபெற்ற விவிலியப் பேச்சு, விவிலிய நாடகப் போட்டிகளில் (தமிழ் பிரிவில்) 3ம் பரிசில்களை பெற்றவர்களுக்கு நீர்கொழும்பு தூய மரியாள் கல்லூரியில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

எமது மறைமாவட்ட உவர்மலைப் பங்கைச் சேர்ந்த மாணவன் டா.திஷாசன் பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் 3ம் இடத்தையம், அதே பங்கைச் சேர்ந்த மாணவர்கள் நாடகப் போட்டியில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளனர்.



## பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா










## உவர்மலை கோணேசபுரத்தில் ஜூபிலியைக் கொண்டாடும் "தூய அந்தோனியார் பாலர் பாடசாலை"








## தூய மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தவக்காலத்தியானம்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோர் இதயம் உறுதியாய் இருக்கும் (தி.பா – 112 : 7)